வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 16.02.2024 வெள்ளிக்கிழமை இதழ் : 47 பக்கங்கள் : 12

## தமிழ் அரசின் மாநாடு பொதுக் குழு முடிவுகளுக்கு

# யாழ்ப்பாணம், திருமலை நீதிமன்றங்கள் தடை!

யாழ்ப்பாணம், பெப்ரவரி 16

**இலங்கை தமிழ் அரசு கட்சியின் தேசிய மாநாட்டை எதிர்வரும் 19ஆம் திகதி - திங்கட்கிழமை நடத்துவதற்கு யாழ்ப்பாணம், திருகோணமலை மாவட்ட நீதிமன்றங்கள் இடைக்கால தடைவிதித்துள்ளன.**

அத்துடன், திருகோணமலையில் கடந்த ஜனவரி 21ஆம் திகதி கட்சியின் பொதுக் குழுவில் புதிய தலைவராக சி. சிறீதரன் தெரிவானமை உள்ளிட்ட முடிவுகள், கடந்த ஜனவரி 27ஆம் திகதி நடந்த பொதுக் குழுக்கூட்டத்தில் கட்சியின் பொதுச் செயலாளர் - நிர்வாகிகள் தெரிவு உள்ளிட்ட முடிவுகள் என்பவற்றுக்கும் இந்தத் தடை செல்லுபடியாகும் என்று திருகோணமலை மாவட்ட நீதிமன்று தனது தீர்ப்பில் தெரிவித் துள்ளது.

**திருமலை நீதிமன்றில்...**

கடந்த ஜனவரி 21, 27ஆம் திகதிகளில் திருகோணமலையில் நடந்த பொதுக்குழு கூட்டங்கள் சட்டத்துக்கு முரணானவை செல்லுபடியற்றவை என்று தீர்ப்பளிக்கக் கோரி கட்சியின் உறுப்பினரான திருகோணமலை - சாம்பல்தீவு கோணேசபுரியை சேர்ந்த சந்திரசேகரம் பரா என்பவர் சட்டத்தரணி ஐஸ்வர்யா சிவகுமார் ஊடாகத் வழக்கு தாக்கல் செய்தார்.

இந்த வழக்கு நேற்று வியாழக்கிழமை நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

வழக்கில் சட்டத்தரணி ஐஸ்வர்யா சிவகுமாரின் அனுசரணையுடன் ஜனாதிபதி சட்டத்தரணி ஜெப்ரி அழகரட்ணம் மற்றும் சட்டத்தரணி புரந்தரன் ஆகியோர் முன்னிலையாகினர்.

வழக்கில், கடந்த ஜனவரி 21 மற்றும் 27 ஆம் திகதிகளில் திருகோணமலையில் நடைபெற்ற பொதுக் குழுக் கூட்டங்கள் சட்டத்துக்கு முரணானவையும் செல்லுபடியற்றவையும். எனவே, அந்த இரண்டு பொதுச் சபை கூட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்ட தெரிவுகள் சட்டத்துக்கு முரணானவை - செல்லுபடியற்றவை. தமிழ் அரசுக் கட்சியின் அமைப்பு விதி அனுமதிக்கின்ற தொகையை விட

11

## "தர்மமே வெல்லும்"

### சிறீதரன் எம். பி. பதிவு



கொழும்பு, பெப். 16

"தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும் மீண்டும் தர்மமே வெல்லும்." - இவ்வாறு தனது 'பேஸ்புக்'கில் பதிவிட்டுள்ளார் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவான சிவஞானம் சிறீதரன். தமிழ் அரசுக் கட்சியின் புதிய

11

## கட்சிக்காக வாதாட தயாராகவுள்ளேன்!

### சுமந்திரன் எம்.பி.



கொழும்பு, பெப். 16

இலங்கை தமிழ் அரசு கட்சியின் தேசிய மாநாடு, பொதுக் குழுக் கூட்டங்களின் முடிவுகளுக்கு திருகோணமலை, யாழ்ப்பாணம் நீதிமன்றங்கள் பிறப்பித்த இடைக்கால தடைகள் தொடர்பான வழக்குகளில் கட்சியின் தலை வர்கள் கேட்டால் முற்பட்டு வாதாடத் தயாராக இருக்கிறேன் - இவ்வாறு

11

## 13இன் பொலிஸ் அதிகாரத்தை நீக்குவதற்கு 22ஆம் திருத்தம்!

### உதய கம்மன்பில தெரிவிப்பு

- 20ஆம் திகதி பாராளுமன்றில் முன்வைக்கப்படும்
- திருத்த யோசனை வர்த்தமானியில் வெளியீடு

கொழும்பு, பெப். 16

மாகாண சபைகளுக்கு 13ஆம் திருத்தச் சட்டம் மூலம் வழங்கப்பட்ட பொலிஸ் அதிகாரத்தை நீக்குவதற்கு 22ஆவது திருத்தச் சட்டத்தை பாராளுமன்றில் கொண்டு வந்து நிறைவேற்றவுள்ளதாக பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.



மாகாண சபைகளின் பொலிஸ் அதிகாரங்களை நீக்குவதற்கு உதய கம்மன்பில முன்மொழிந்த 22 ஆம் திருத்தச் சட்ட யோசனை கடந்த செவ்வாய்க்கிழமை வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. இது தொடர்பில் நேற்று அவர் கொழும்பில் செய்தியாளர் சந்திப்பை நடத்தினார்.

அப்போது அவர் தெரிவித்தவை

11

## தலைமன்னார் - இராமேஸ்வரம் தொடர்பு குறித்து ஆராய்கிறோம்

### இந்திய தூதுவர் மன்னாரில் தெரிவிப்பு

மன்னார், பெப். 16

தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்துக்கும் இடையில் இருக்கின்ற தொடர்புகளை எவ்வாறு பயன்படுத்த முடியும் என்பது தொடர்பில் ஆராய்ந்து வருகிறோம் என்று இலங்கைக்கான இந்திய இந்திய உயர்ஸ்தானிகர் எச். இ. சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்ட மீனவர்களுக்கு குளிர்சாதனப் பெட்டிகள் வழங்கும் நிகழ்வு நேற்று வியா



ழக்கிழமை மன்னார் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், இலங்கை மக்களுக்கு நாங்கள் எவ்வாறு உதவி செய்துள்ளோம். அவை சமுதாய நோக்கத்துடன் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதே போன்றே மீனவர் சமூகமும் முக்கியத்துவம் பெறுகின்றது. மன்னாருக்கு அதிகம் சுற்றுலா பயணிகள் வருகை தருவதைப் பார்க்கக் கூடியதாக உள்ளது. குறிப்பாக இந்தியாவில் இருந்து வருகை தரும் மக்களால் இங்கு அபிவிருத்தி

11

## அஸ்வெசும விண்ணப்பங்கள் ஏற்கும் பணி நேற்று ஆரம்பம்!

கொழும்பு, பெப். 16

அஸ்வெசும இரண்டாம் கட்டத்துக்காக விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் பணி நேற்று ஆரம்பமானதாக நலன்புரி நன்மைகள் சபையின் தலைவர் ஜயந்த விஜயரத்ன தெரிவித்தார். தகுதிபெறும் அனைவருக்கும் எவ்வித தடங்கலும் இன்றி அஸ்வெசும பலன்கள் கிடைக்குமெனவும் அவர் கூறினார்.

அஸ்வெசும முதல்கட்டத்தில் விண்ணப்பங்களை சமர்ப்பிக்காத குடும்பங்களுக்கும் விண்ணப்பங்களை சமர்ப்பித்தும் வீட்டுத் தகவல் கணக்கெடுப்புக்கு உட்படுத்தப்படாத எந்தவொரு நபரும்

11

## ஹெகலிய உட்பட 7பேருக்கு மீண்டும் விளக்க மறியல்

கொழும்பு, பெப். 16

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மற்றும் முன்னாள் சுகாதார அமைச்சின் செயலாளர் ஜானக சந்திரகுப்தா உள்ளிட்ட 7 பேரையும் எதிர்வரும் 29ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மாளிகாகந்தை நீதிவான் நீதிமன்றில் இவர்கள் தொடர்பான வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

தரமற்ற இம்யூனோகுளோபுலின் குப்பிகளை

11

## நிகழ்நிலை பாதுகாப்பு சட்டத்தின் புதிய வரைவு விரைவில் மன்றுக்கு

### நீதி அமைச்சர் விஜயதாஸ

கொழும்பு, பெப். 16

நிகழ்நிலை காப்புச்சட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய திருத்தங்கள் சட்ட வரைவு திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன. புதிய சட்டமூலம் தயாரிக்கப்பட்டு விரைவில் அதனை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ் தெரிவித்தார்.

நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு மறு சீரமைப்பு அமைச்சில் நேற்று வியாழக் கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது

தமிழ் அரசுக் கட்சியில் ஏற்பட்டிருந்த குழப்பம் நீங்கிவிட்டது. எல்லாம் சுமுகமாக நடக்கவிருக்கின்றது எண்ணிக் கொண்டிருந்தவர்களுக்கு அந்தச் செய்தி நிச்சயம் மகிழ்ச்சியைத் தந்திருக்காது.

“உட்கட்சி ஜனநாயகத்தைச் சிதைக்கும் வகையில் இடம்பெறும் சூழ்ச்சிகளை முறியடித்து உடனடியாக மாநாட்டை நடத்துமாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பெருந்தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன், தமிழ் அரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள சிவஞானம் சிறீதரனுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்”, என்ற செய்தியைப் படித்தபோது இந்த ஊர்க்குருவியைப் போலவே பலருக்கும் ஆச்சரியமாக இருந்திருக்கலாம்.

தமிழ் அரசின் புதிய தலைவராக தெரிவுசெய்யப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தனது பாராளுமன்ற சகாவான சார்ள்ஸ் நிர்மலநாதனுடன் கொழும்பிலுள்ள இல்லத்தில் இரா. சம்பந்தனை சந்தித்துக் கலந்துரையாடியிருக்கிறார்.

அப்போதே, கட்சியின் தலைமைப் பொறுப்பை உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்வதற்கு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் நிர்வாகிகள் தெரிவு தொடர்பில் இணக்க அடிப்படையில் எட்டப்பட்ட முடிவுகளை பொதுச் சபை அங்கீகரிக்காதவிடத்து அல்லது அந்தத் தெரிவுகளில் குழப்பங்கள் நிலவுமிடத்து தேர்தல் முறைமை மூலம் தெரிவுகளை நடத்தி அன்றையதினமே மாநாட்டையும் நடத்துமாறு இரா.சம்பந்தன், சிவஞானம் சிறீதரனுக்கு அறிவுறுத்தல் வழங்கியிருக்கிறார்.

அவர் சுட்டிக்காட்டியிருக்கும் சூழ்ச்சி என்ன என்பது பற்றியோ அல்லது அந்த சூழ்ச்சியை செய்பவர்கள் யார் என்பது பற்றியோ சம்பந்தன் விபரமாக புதிய தலைவரிடம் எடுத்துக் கூறினாரா என்பது தெரியவில்லை. ஆனால், கட்சிக்குள் சூழ்ச்சி நடந்துகொண்டிருக்கின்றது என்று பெருந்தலைவர் சம்பந்தன் கூறியிருப்பதை வெறுமனே கடந்து சென்று விடமுடியாது.

கடைசியாக திருகோணமலையில் நடைபெற்ற மத்திய செயல்குழு தெரிவுசெய்திருக்கும் நிர்வாகிகளை ஏற்றுக்கொள்வதா? இல்லை, என்று பொதுச்சபையில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பு முறையாக நடக்கவில்லை என்பதே பெரும்பாலானவர்களின் கருத்தாக இருந்தபோது, முறையாக அறிவித்தல் விடுக்கப்பட்டு பொதுச்சபை உறுப்பினர்கள் அனைவரிடமும் இரகசிய வாக்கெடுப்பை நடத்தியிருக்கவேண்டும். அதைவிடுத்து அங்கிருந்தவர்களிடையே வாக்கெடுப்பை நடத்தியது தவறு என்று பலரும் வாதிட்டுக் கொண்டிருக்கையில் அவர்கள் பதவியேற்க ஏற்பாடு செய்யுமாறு தலைவரிடம் கோரி பகிரங்க கடிதம் எழுதியதும் அது தொடர்பாக தனது சட்டவிளக்கங்களை நீண்ட கடிதமாக எழுதியதும் பலரையும் முகம் சுழிக்க வைத்திருக்கின்ற நிலையிலேயே சம்பந்தன் சற்று கடும் தொனியில் அறிவுறுத்தல் வழங்கியிருக்கின்றார்.

ஏற்கனவே செயல்குழு தெரிவு செய்திருக்கும் நிர்வாகிகளின் தெரிவை பொதுச்சபை ஏற்றுக் கொள்ளாதவிடத்து தேர்தல்முறை மூலம் தெரிவுகளை நடத்தி அன்றைய தினமே மாநாட்டையும் நடத்தச் சொல்லியிருக்கின்றார் சம்பந்தன்.

தெரிவு முடிந்துவிட்டது பொதுச்சபை கைகளை உயர்த்தி அதனை ஏற்றுக்கொண்டுவிட்டது என்று கட்சியின் பிரதி செயலாளராக இருந்த ம. ஆபிரகாம் சுமந்திரன், சட்ட வியாக்கியானம் வழங்கிய பின்னரும் சம்பந்தன் இவ்வாறு கூறியிருப்பது அவர் அந்த விளக்கங்களை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதையே வெளிப்படுத்தியிருக்கின்றது. சம்பந்தன் ஐயாவும் ஒரு மூத்த சட்டத்தரணி - தமிழ் அரசின் தலைவராக இருந்தவர்.

பலரும் அன்றைய தினம் கட்சி மாநாட்டை நடத்தாமல் தலைவர் மாவை சேனாதிராசா ஒருதலைப் பட்சமாக ஒத்திவைத்தது இன்னமும் சில காலம் தான் தலைவராக தொடர்வதற்காகத்தான் என்றவாறு எழுதிவரும் நிலையில் சம்பந்தன் கட்சிக்குள் சூழ்ச்சி இடம்பெற்று வருகின்றது என்கிறார்.

தலைவர் தெரிவுக்கான தேர்தலில் மாவை மட்டுமின்றி சம்பந்தனும் யார் வெற்றிக்காக உழைத்தார்கள் என்பது கட்சியினருக்கு மாத்திரமின்றி வெளியிலுள்ளவர்களுக்கும் தெரிந்ததுதான். அப்படியிருக்கையில், அவர் பதவியேற்பதை தள்ளி வைத்தது அந்தக் குறுகிய காலத்துக்கு தானே தலைவராக தொடர மாவை சதி செய்தார் என்பது மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போடுவது போன்றது. அன்று அந்த மாநாடு நடந்து செயல் குழுவில் முடிவெடுக்கப்பட்ட நிர்வாகிகளே நிர்வாகத்தை பொறுப்பெடுக்கும் நிலை வந்திருந்தால் கட்சி இன்னமும் அவமானப்பட்டிருக்கும் என்பதை மாவை புரிந்துகொண்டதாகவே தெரிகின்றது.

இது ஓர் உட்கட்சி விவகாரம். இதில் சட்டம் பேசுவதற்கு இடமில்லை. அப்படி சட்டத்தை கையில் எடுத்தால், கட்சி சந்தியில் நிற்கவேண்டிவருமே தவிர, மீண்டும் அரசியல் செய்ய முடியாது. சம்பந்தன் ஐயா இதனை நன்றாகப் புரிந்துகொண்டிருப்பதாகவே தெரிகின்றது.

இந்தப் பத்தியை எழுதி முடிக்கும் தருணத்தில் அந்த நீதிமன்ற செய்தி கிடைத்தது. ஒரு வழக்கு கட்சி யாப்புக்கு முரணாக பொதுச்சபையில் அதிகம் பேர் உறுப்பினராக்கப்பட்டமைக்கு எதிரான வழக்கு. மற்றையது அடுத்த மாநாடு பத்தொன்பதாம் திகதி நடத்தப்படுவதற்கு எதிரானது. அதாவது இருபத்தியொரு நாள் அவகாசம் வழங்கி முன்அறிவித்தல் கொடுத்தே மாநாடு நடக்கவேண்டும் என்ற விதி மீறல் பற்றியது. இந்தப் பத்தியில் தொடர்ந்து நாம் தெரிவித்துவந்த ஒரு குற்றச்சாட்டு இப்போது நிரூபணமாகியிருக்கின்றது. சில வேளை சிறீதரன் தோற்றிருந்தால், இப்போது எல்லாம் சுமுகமாக நடந்துகொண்டிருக்கும். இனி நீதிமன்றத்தில் இருக்கும் ஒரு விவகாரம் குறித்து அதிகம் எழுதுவது சரியாக இருக்காது.

**- ஊர்க்குருவி.**

# அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உதவிச் செயலாளரை சந்தித்த மைத்திரிபால

கொழும்பு, பெப். 16

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான பிரதி உதவிச் செயலாளர் அஃப்ரின் அக்தருக்குமிடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் இடம்பெற்றது.

இலங்கையின் அரசியல் நிலவரங்கள் குறித்து நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றதுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினால் உருவாக்கப்பட்ட கூட்டணி மற்றும் இருதரப்பு விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இலங்கைக்கு வழங்கிய ஆதரவுக்கும் தனது பாராட்டுகளை முன்னாள் ஜனாதிபதி மைத்தரிபால சிறிசேன தெரிவித்தார்.(அ)

# 3 வீதமான பாடசாலை மாணவர்கள் கற்றல் நடவடிக்கையிலிருந்து விலகல்!

கொழும்பு, பெப். 16

நாட்டிலுள்ள பாடசாலை மாணவர்களில் 3 சதவீதமானோர் கற்றல் நடவடிக்கைகளில் இருந்து முற்றாக விலகியுள்ளதாக தேசிய தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது குறித்து தேசிய தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் வெளியிட்டுள்ள தகவலின் படி” நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக, பாடசாலை மாணவர்களில் 54.9 சதவீதமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும், அவர்களில் 53.2 சதவீதமானோர், பாடசாலைக்கான புதிய உபகரணங்களை கொள்வனவு செய்வதை முற்றிலும் நிறுத்தியுள்ளனர்” எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(அ)

# இலத்திரனியல் ஊடகங்களை கட்டுப்படுத்த அரசாங்கம் முயற்சி

## ஹர்ச டி சில்வா குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 16

அரசாங்கம் இலத்திரனியல் ஊடகங்களைக் கட்டுப்படுத்த முயற்சிப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா குற்றம் சாட்டியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட ஹர்ச டி சில்வா எம்.பி., நிகழ்நிலை பாதுகாப்புச் சட்ட மூலத்தின் ஊடாக அரசாங்கம் சமூக ஊடக செயற்பாட்டாளர்களை ஒடுக்கி வைத்துள்ளது.

இப்போது ஒளிபரப்பு ஆணைக்குழு சட்டமூலத்தின் மூலம் எதிர்காலத்தில் இலத்திரனியல் ஊடகங்களைக் கட்டுப்படுத்தும் முயற்சியொன்றை முன்னெடுத்துள்ளது.

இந்த அரசாங்கத்தில் கருத்துச் சுதந்திரம் , அடிப்படை உரிமைகளை ஒரு போதும் மதிக்காமல் நடந்துகொள்ளத் தலைப்படுகின்றது என்றும் ஹர்ச டி சில்வா தொடர்ந்தும் குற்றம் சாட்டியுள்ளார்.

(அ)

# சட்டமா அதிபரின் அனுமதி பெறாமல் சட்டத்தரணிகளை கைது செய்யமுடியாது

## பொலிஸ் அதிகாரிகளுக்கு பணிப்பு

கொழும்பு, பெப். 16

சட்டமா அதிபரின் ஆலோசனையின்றி இனி சட்டத்தரணிகளை கைது செய்ய இடமளிக்கப்படமாட்டாது என்று சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரட்ணம் உறுதியளித்துள்ளார்.

யாழ்.மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் பாலசுப்பிரமணியம் தவபாலன் தலைமையிலான சட்டத்தரணிகள் குழுவுடனான கலந்துரையாடலின் பின்னர் அவர் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார். இந்த சந்திப்பில் பொலிஸ் உயர் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இனி வரும் காலங்களில் சட்டத்தரணிகளை கைது செய்யும்போது சட்டமா அதிபர் திணைக்களத்தின் அனுமதி பெறப்படாமல் கைது செய்ய முடியாது என அதன் போது தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

குறித்த தீர்மானத்தை சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி வைக்குமாறு சட்டமா அதிபர் உயர் பொலிஸ் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.(அ)

# வெளிநாட்டு பயணங்களுக்கு ஜனாதிபதி அநாவசிய செலவு

## டலஸ் அழகப்பெரும குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 16

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெளிநாட்டுப் பயணங்களின் போது அநாவசிய செலவுகள் அதிகரித்துள்ளதாக டலஸ் அழகப்பெரும எம்.பி. குற்றம் சாட்டியுள்ளார்

சுதந்திர மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், கடந்த ஆண்டு உள்ளூராட்சி மன்ற ங்களுக்கான தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆயினும் அரசாங்கத்திடம் போதிய நிதி இல்லை என்று தேர்தல்கள் ஒத்தி வைக்கப்பட்டது.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலுக்கு மொத்தம் ஐந்து பில்லியன் மட்டுமே தேவையாக இருந்த நிலையில் அரசாங்கம் அதற்கான நிதி ஒதுக்கீட்டை வழங்கவில்லை.

அதன காரணமாக தேர்தலுக்கான பிரசாரங்களும் முன்னெடுக்கப்பட்டு, வாக்களிப்பு நாள் நெருங்கியிருந்த நிலையில் வேறு வழியின்றி தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது.

தேர்தல்களுக்கு செலவழிக்க நிதி பற்றாக்குறை என்று அரசாங்கம் ஒரு புறத்தில் கூறிக் கொண்டே ஜனாதிபதியின் வெளிநாட்டுப் பயணங்களுக்கு மில்லியன் கணக்கில் செலவழிக்கின்றது.

இவர்களைப் பொறுத்தவரை தேர்தல்கள் நடத்துமாறு கோரினால் நிதி இல்லை என்பார்கள்.

ஆனால் அநாவசிய செலவுகளுக்கு அள்ளி இறைத்து செலவழிப்பார்கள் - என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu
16.02.2024 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம், மாசி 04

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## தமிழ் அரசு கட்சியின் எதிர்காலம்!

இலங்கை தமிழ் அரசு கட்சியின் மகாநாட்டை நடத்துவதற்கு எதிராக நீதிமன்றம் இடைக்கால தடையுத்தரவை பிறப்பித்துள்ளது. இது தொடர்பில் 'ஈழநாடு' ஏற்கனவே எச்சரித்திருந்தது - அதாவது, தமிழ் அரசு கட்சியின் உள்விவகாரம் சுமுகமான தீர்வை காணாது விட்டால் நிச்சயம் கட்சிக்குள் பிளவு அதிகரிக்கும் - நிலைமை மோசமடையும். இப்போது மீளவும், ஒரு விடயம் தொடர்பில் எச்சரிக்கின்றோம் - அதாவது, நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டிருக்கும் வழக்கை ஒரு போட்டிக் களமாக இரண்டு தரப்புகளும் பயன்படுத்துமாக இருந்தால், இலங்கை தமிழ் அரசு கட்சி அடுத்த தேர்தலில் போட்டியிட முடியாதளவுக்கு முடங்கக்கூடும்.

இலங்கை தமிழ் அரசு கட்சியின் புதிய தலைவராக சிவஞானம் சிறீதரன் தெரிவானமையைத் தொடர்ந்து இரண்டு அணிகள் உருவாகின. போட்டியின் மூலம் தலைவரைத் தெரிவு செய்யும் விவகாரம் ஒரு விஷப்பரீட்சையாகவே இருந்தது - இதன் காரணமாகவே முடிந்தவரை இணக்கமான வகையில் ஒருவரைத் தெரிவு செய்யும் ஆலோசனை முன்வைக்கப்பட்டது - எனினும், போட்டியிட்ட இரண்டு பேரும் விலகுவதற்கு இணங்காத நிலையில் இறுதியில் கட்சி இரண்டாக பிளவுபட்டிருக்கின்றது.

தமிழ் அரசு கட்சி ஒரு பாரம்பரியக் கட்சி என்றாலும்கூட அதனை உருவாக்கிய செல்வநாயகம் காலத்திலேயே கைவிடப்பட்ட கட்சி. விடுதலைப் புலிகளே, மீளவும் அதற்கு உயிரளித்தனர். அவர்கள் உண்மையில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குத்தான் உயிரளித்திருக்க வேண்டும். ஏனெனில், தமிழ் அரசு கட்சியை விடவும் தமிழர் விடுதலைக் கூட்டணிதான் வரலாற்றுரீதியான முக்கியத்துவம் உடைய கட்சி. எனினும், ஆனந்தசங்கரியுடனான முரண்பாட்டின் விளைவாக அந்தக் கட்சியின் சின்னத்தை பயன்படுத்த முடியாமல் போனது.

இவ்வாறானதொரு நிலையில்தான், மீண்டும் அரசியல் அரங்குக்கு வந்த தமிழ் அரசுக் கட்சி 2009இற்கு பின்னரான அரசியல் சூழலில் இரா. சம்பந்தன் மற்றும் மாவை சேனாதிராசாவின் தலைமைத்துத்தின் கீழ் சரியாக வழிநடத்தப்படவில்லை. தங்களுடைய கதிரைகளை காப்பாற்றுவதற்கான கட்சியாகவே இதனை அவர்கள் பயன்படுத்திக் கொண்டனர். இவ்வாறானதொரு நிலையில்தான் சம்பந்தன் செயல்பட முடியாமல்போன நிலையில் கட்சிக்குள் குழப்பங்கள் ஏற்பட்டன. சம்பந்தன் கட்சியின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு சரியான தீர்மானங்களை சரியான தருணத்தில் முன்னெடுக்கவில்லை. இதன் விளைவாகவே அடுத்த தலைமைத்துவம் தொடர்பில் கட்சிக்குள் போட்டி மனோபாவம் அதிகரித்தது. சுமந்திரனுக்கு அளவுக்கு அதிகமான இடத்தை சம்பந்தன் வழங்கியதால் ஏனையவர்கள் மத்தியில் அதிருப்திகள் ஏற்பட்டன. தங்களின் முக்கியத்துவம் தொடர்பில் அவர்கள் மத்தியில் கேள்விகள் ஏற்பட்டன.

இதன் விளைவுகளே தற்போது கட்சி எதிர்கொண்டுள்ளது. தற்போதுள்ள நிலையில், கட்சி சட்டரீதியான சவாலை எதிர்கொண்டுள்ளது. கட்சியின் பிரச்னையை நீதிமன்றத்துக்குக் கொண்டு சென்றிருப்பதானது கட்சியின் இயலாமையையே காண்பிக்கின்றது. தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று பதவிகளை பெற்றவர்கள் தற்போது தங்களின் அதிகார மோகத்துக்காக மோதிக் கொண்டிருக்கின்றனர். இந்தப் பின்புலத்தில் நோக்கினல் தமிழ் அரசு கட்சியின் எதிர்காலத்தில் சுமுகமாக நகர்வதற்கான வாய்ப்புகள் மிகவும் மங்கலாகவே தெரிகின்றன.

# யாழ். பொலிஸ் நிலையத்தில் அணிவகுப்பும் பரிசோதனையும்

*யாழ்ப்பாணம், பெப். 16*

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய வருடாந்த பொலிஸ் அணிவகுப்பும் பொலிஸ் பரிசோதனையும் நேற்று காலை நடைபெற்றது.

இந்தப் பரிசோதனை நிகழ்வில் யாழ்ப்பாண பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெகத் நிசாந்த பரிசோதனைகளை முன்னெடுத்தார். அத்துடன், பொலிஸாரின் அணிவகுப்பு மரியாதையும் நடைபெற்றது.

அணிவகுப்பு நிகழ்வில் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் கடைமையாற்றும் பொலிஸாரின் சீருடைகள், ஆயுதங்கள் வாகனங்கள், பரிசோதிக்கப்பட்டன. அத்துடன், பொலிஸாருக்கு விசேட அறிவுரைகளும் வழங்கப்பட்டன.

நிகழ்வில் யாழ்ப்பாண பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜருள் யாழ்ப்பாண பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உட்பட பொலிஸ் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

# அத்தியாவசிய பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டன!

*கொழும்பு, பெப். 16*

*சில அத்தியாவசிய பொருட்களின் விலை குறைக்கப்படும் என லங்கா சதொச தலைவர் பசந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.*

*நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் வைத்து அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.*

*இந்த விலை குறைப்பு நேற்று முதல் அமுலுக்கு வருவதாகத் தெரிவித்த அவர், 8 வகையான பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.*

*இதன்படி, சிவப்பு கௌபி - 1,095 ரூபாய், வெள்ளை கௌபி - 1,200 ரூபாய், சிவப்பு வெங்காயம் - 325 ரூபாய், முந்திரி - 1,300 ரூபாய், ரின் மீன் (இறக்குமதி செய்யப்பட்டது) 425 கிராம் - 575 ரூபாய், செத்தல் மிளகாய் - 1,210 ரூபாய், வெங்காயம் - 365 ரூபாய், வெள்ளை சீனி - 275 ரூபாய், உருளைக்கிழங்கு - 299 ரூபாய், சிவப்பு அரிசி - 174 ரூபாய், ரின் மீன் (இறக்குமதி செய்யப்பட்டது) 155 கிராம் - 290 ரூபாய், பாஸ்மதி அரிசி (பிரீமியம்) - 760 ரூபாய். (ஐ)*

## தியாகராஜ சுவாமிகள் இசை ஆராதனை இன்று

*யாழ்ப்பாணம், பெப். 16*

*யாழ். இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு தியாகப் பிரம்மம் சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளுக்கான 'இசை ஆராதனை' நிகழ்வு நடைபெறவுள்ளது.*

*யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தின் வெளியரங்கில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் கலந்து கொண்டு 'பஞ்சரத்தின கீர்த்தனைகளை' இசைத்து ஆராதனை செய்ய வருமாறு அனைத்துக் கலைஞர்களுக்கும் இந்திய துணைத் தூதரகம் அழைப்பு விடுத்துள்ளது. பங்கேற்கும் கலைஞர்கள் ஒலிவாங்கி பரிசோதனை மற்றும் முன்னாயத்த செயல் பாடுகளுக்காக, 45 நிமிடம் முன்னதாக வருமாறும் கேட்கப்பட்டுள்ளது.*

## திருமணம், பிறப்பு வீதம் நாட்டில் குறைந்து வருகிறது!

*கொழும்பு, பெப். 16*

நாட்டில் திருமண வீதமும் பிறப்பு வீதமும் படிப்படியாகக் குறைந்து வருகின்றன என்று கொழும்பு பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞானப் பேராசிரியர் இந்திரலால் டி சில்வா தெரிவித்துள்ளார்.

சமீபத்திய கணக்கெடுப்பின் தரவுகளை அறிவித்த பேராசிரியர், புதிதாகப் பிறந்தவர்களின் எண்ணிக்கை சுமார் ஒரு இலட்சம் குறைந்துள்ளது. தற்போது நாட்டில் உள்ள பெண்களுக்கு திருமணம் செய்து கொள்வதற்கு தகுதியான ஆண் ஒருவரை தேடுவது கடினம்.

அடுத்த 10 ஆண்டுகளில் நாட்டின் இளைஞர் சனத்தொகையில் கணிசமான குறைவை காண முடியும் - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பருத்தித்துறையில் நாளை கண்புரை பரிசோதனை!


*யாழ்ப்பாணம், பெப். 16*

*கண்புரை (கற்றாக்ட்) சத்திரசிகிச்சை செய்ய வேண்டிய நோயாளர்களைப் பரிசோதனை செய்து தெரிவு செய்யும் கண்பரி சோதனை முகாம் நாளை சனிக்கிழமை காலை 8.00 மணி தொடக்கம் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் நடைபெறவுள்ளது.*

இதில் தெரிவு செய்யப்படும் நோயாளர்களுக்கான கண்புரை சத்திரசிகிச்சை யாழ். போதனா மருத்துவமனையில் முற்றிலும் இலவசமாக செய்யப்படும்.

எனவே, கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ளவேண்டிய தேவையுள்ள நோயாளர்கள் மேற்படி கண்பரிசோதனை முகாமில் கலந்து கொண்டு தங்கள் பெயர்களைப் பதிவுசெய்யுமாறு யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் வீண் செலவுகளை குறைக்க முடியாமல் திணறுவீர்கள். கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். முன்கோபத்தை தவிர்க்க வேண்டிய நாள்.

**இடபம்**
திட்டமிட்ட காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். வியாபாரத்தில் வேலையாட்களால் பிரச்னைகள் வந்து நீங்கும். மோதல்கள் வேண்டாமே. முன்னேறும் நாள்.

**மிதுனம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நீண்ட நாட்களாக பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடி வருவார். வியாபாரத்தை பெருக்குவீர்கள். புகழ் கௌரவம் கூடும் நாள்.

**கடகம்**
மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். சாதிக்கும் நாள்.

**சிம்மம்**
இதுவரை இருந்து வந்த அலைச்சல் டென்ஷன் குறைந்து மனதில் மகிழ்ச்சியாக இருக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். புதிய பாதை தெரியும் நாள்.

**கன்னி**
சந்திராஷ்டமம் இருப்பதால் சந்தேகபடுவதை முதலில் நிறுத்துங்கள். வியாபாரத்தில் பெரிய இழப்புக்களை ஏற்பட கூடும். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். நாவடக்கம் தேவைப்படும் நாள்.

**துலாம்**
கணவன் - மனைவிக்குள் புரிந்துணர்வு அதிகரிக்கும். வியாபாரத்தில் தள்ளிப்போன ஒப்பந்தம் கையெழுத்தாகும். புதிய பொறுப்புகள் தேடி வரும். தைரியம் கூடும் நாள்.

**விருட்சிகம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். சில புதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள்.

**தனுசு**
புதிய திட்டங்கள் நிறைவேறும். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**மகரம்**
அரசு காரியங்கள் சாதகமாக முடியும்.வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள் சில சூழ்ச்சிகளை கற்றுக் கொள்வீர்கள். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**கும்பம்**
சொத்து பிரச்னைக்கு நல்ல தீர்வு கிடைக்கும். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு சில ஆலோசனையை தருவீர்கள். வெற்றியைத் தரும் நாள்.

**மீனம்**
குடும்பத்தில் இதுவரை வந்த பிரச்னைகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். மதிக்கப்படுவீர்கள். வியாபாரத்தில் தள்ளிப் போன ஒப்பந்தம் கையெழுத்தாகும். மனசாட்சிபடி செயல்படும் நாள்.

# வளர்ந்துவரும் பா. ஜ. கவை வீழ்த்த தி. மு. க., அ. தி. மு. க. இரகசிய திட்டம்?

சென்னை, பெப். 16

தமிழகத்தில் பா. ஜ. க வளர்ச்சியை தடுக்க தி. மு. கவும், அ.தி.மு.கவும் இரகசிய வியூகம் வகுத்துள்ளன என்று தகவல் வெளியாகியுள்ளது.

முன்னாள் முதல்வர் பன்னீர் செல்வத்தின் கடும் எதிர்ப்பையும்மீறி, அ. தி. மு. க., பொது செயலாளரான பழனிசாமி, எதிர்க்கட்சி துணைத் தலைவர் பதவியை, முன்னாள் அமைச்சர் உதயகுமாருக்கு வழங்கினார். ஆனாலும், சட்டசபையில் எதிர்க்கட்சி துணைத் தலைவர் இருக்கை பன்னீர்செல்வத்திற்கே வழங்கப்பட்டது. அதை உதயகுமாருக்கு ஒதுக்கக் கோரி, கடந்த ஓராண்டுக்கும் மேலாக அ. தி. மு. க. போராடியது.

இந்நிலையில் திடீரென, 'அ. தி. மு. கவின் கோரிக்கையை பரிசீலிக்க வேண்டும்' என, முதல்வர் ஸ்டாலின் சட்டசபையில் பேச, அடுத்த நாளே உதயகுமாருக்கு எதிர்க்கட்சி துணைத் தலைவர் இருக்கை ஒதுக்கப்பட்டது. இது, அரசியல் வட்டாரங்களில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஜெயலலிதா மறைவுக்கு பின், அ. தி. மு.கவின் இடத்தைப் பிடிக்க பா. ஜ. க. முயற்சிப்பதாக, தி.மு.கவும், அதன் கூட்டணி கட்சிகளான காங்கிரஸ், கம்யூனிஸ்ட், விடுதலை சிறுத்தைகள் உள்ளிட்ட கட்சிகள் வெளிப்படையாகவே பேசி வருகின்றன.

கடந்த 2021இல் தமிழக பா. ஜ. க. தலைவராக அண்ணாமலை பொறுப்பேற்ற பின், அ. தி. மு. க. - பா. ஜ. க. உறவு மோசமடைந்தது கடந்த 2022 பெப்ரவரியில் நடந்த நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில், பா.ஜ., தனித்தே போட்டியிட்டது.

அதன்பிறகு, முன்னாள் அமைச்சர் கே.பி.முனுசாமி, 'தி.மு.க., அரசை ஒரு கட்டத்துக்கு மேல் விமர்சிக்க முடியாது. உங்கள் இடத்துக்கு அதாவது ஆளுங்கட்சி வரிசைக்கு நாங்கள் வர வேண்டும். எதிர்க்கட்சி வரிசைக்கு நீங்கள் வர வேண்டும். வேறு சக்திகள் வருவதை தடுக்க வேண்டும். சொல்லப் போனால், நமக்குள் நடப்பதெல்லாம் பங்காளி சண்டைதான்' என்று சட்டசபையிலும், வெளியிலும் பேசினார்.

அதாவது, எக்காரணம் கொண்டும், இரு கட்சிகளுக்கும் இடையே பா. ஜ., வளர்ந்து விடக்கூடாது என்பதுதான் அவருடைய பேச்சின் சாராம்சம்.

முன்னாள் அமைச்சர் செங்கோட்டையனும், 'தமிழகத்தை தி. மு. க., ஆள வேண்டும் அல்லது அ. தி. மு. க., ஆள வேண்டும். மற்றவர்களை அனுமதிக்கக்கூடாது' என, சட்டசபையில் பேசினார்.

இந்நிலையில், தமிழக அரசியலில் இரண்டாவது இடத்தை, பா.ஜ., பிடித்துவிடக் கூடாது என்பதற்காக பல்வேறு விசயங்களில், தி.மு.க.,வும், அ.தி.மு.க.,வும் இணைந்து செயல்படுகின்றன. இதனால்தான் பழனிசாமி மற்றும் அ. தி. மு. க., முன்னாள் அமைச்சர்கள்மீதான ஊழல் வழக்குகள், கொடநாடு கொலை, கொள்ளை வழக்குகளில், ஆரம்பத்தில் காட்டப்பட்ட வேகம் இப்போது இல்லை என்றும் கூறப்படுகிறது. (ஐ)

# தமிழ் வளர்ச்சிக்கு தமிழக அரசின் நடவடிக்கைக்கு நீதிமன்று பாராட்டு

சென்னை, பெப். 16

தமிழ் வளர்ச்சிக்கு தமிழக அரசு எடுத்துவரும் நடவடிக்கை திருப்தியளிப்பதாக சென்னை உயர்நீதிமன்றம் பாராட்டு தெரிவித்துள்ளது.

உலக தமிழ் ஆராய்ச்சி அறக்கட்டளைத் தலைவர் கனகராஜ், 'தமிழ் மொழி மேம்பாடு குறித்து ஆய்வுகள் நடத்த அறிஞர் குழுவை அமைக்க வேண்டும். தமிழக அரசு அரசாணையை தமிழில் வெளியிட வேண்டும்' எனக் குறிப்பிட்டு சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது தமிழக அரசு தரப்பில், "தமிழ் ஆராய்ச்சிக்காக உலக தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தால் 2013ல் ரூ.50 இலட்சம் ஒதுக்கப்பட்டது. தமிழ் வழியில் படித்தவர்களுக்கு வேலை வாய்ப்புகளில் இட ஒதுக்கீடு வழங்கப்படுகிறது. கீழமை நீதிமன்றங்களில் சாட்சியங்களை தமிழில் பதிவு செய்ய அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது" என வாதிடப்பட்டது.

தமிழக அரசின் வாதத்தை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள், 'தமிழ் வளர்ச்சிக்கு தமிழக அரசு எடுத்துவரும் நடவடிக்கை திருப்தியளிக்கிறது. தமிழ் வளர்ச்சிக்காக எந்த உத்தரவும் பிறப்பிக்க தேவையில்லை' எனக் கூறி வழக்கை முடித்து வைத்தனர். (ஐ)

# அப்பாவின் புத்தகத்தை மகன் படிக்காததாலேயே பிரச்னை!

## ஸ்டாலினை சாடுகிறார் அண்ணாமலை



கோவை, பெப். 16

ஒரே நாடு ஒரே தேர்தல் சட்டம் தேவை என்று கருணாநிதி தனது நெஞ்சுக்கு நீதி நூலில் குறிப்பிட்டுள்ளார். அப்பாவின் புத்தகத்தை மகன் படிக்காததே பிரச்னைக்கு காரணம் இவ்வாறு பா. ஜ. கவின் தமிழ்நாடு தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

கோவையில் செய்தியாளர்களை சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'ஒரே நாடு ஒரே தேர்தல்' என்பது காலத்தின் கட்டாயம். ஆனால், இதை எதிர்த்து, தமிழக சட்டசபையில், தீர்மானம் கொண்டு வந்துள்ளனர். 1967ஆம் ஆண்டு வரை, இந்தியாவில் ஒரே சமயத்தில் சட்டசபை, மக்களவைத் தேர்தல் நடந்தது.

அதன்பின் காங்கிரஸ் கட்சி, சட்டப்பிரிவு 356ஐ, 50 முறை பயன்படுத்தி மாநில ஆட்சியை கலைத்ததால், தேர்தல் முறை மாறி வந்தது. முன்னாள் முதல்வர் கருணாநிதி, தன், 'நெஞ்சுக்கு நீதி' புத்தகத்திலும், 'ஒரே நாடு ஒரே தேர்தல் தேவை' என, 1970ல் வலியுறுத்தியுள்ளார்.

அப்பா கருணாநிதி எழுதிய புத்தகத்தை மகன் ஸ்டாலின் படிக்காததே இந்த பிரச்னைக்குக் காரணம். மொத்தத்தில் அப்பாவின் கருத்துக்கு எதிராக மகன் ஸ்டாலின் உள்ளார் என்பதே, இதன் வாயிலாக அறிந்து கொள்ள வேண்டியது.

வரும் மக்களவைத் தேர்தலில், 'ஒரே நாடு ஒரே தேர்தல்' வர நடைமுறை சாத்தியமில்லை. இருந்தாலும், முதல்வர் ஸ்டாலின், 'எடுத்தோம் கவிழ்த்தோம்' என 10 வரிகளில் எழுதிக் கொண்டு வந்து பேசி, முன்யோசனை இல்லாமல் செயல்பட்டுள்ளார். யாரை குழப்ப, தீர்மானங்களைக் கொண்டு வந்துள்ளார் என தெரியவில்லை - என்றார். (ஐ)

ஈழநாடு



# நாட்டு மக்களுக்காக நாம் ஒன்றிணைவோம்

## ஜனாதிபதி மீண்டும் அழைப்பு

கொழும்பு, பெப். 16

**“அரசியல் ரீதியில் பிரிந்து நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது, அரசாங்கத்திற்காகவோ எதிர்க்கட்சிக்காகவோ அல்லாது நாட்டு மக்களுக்கு வளமான வாழ்க்கைத் தரத்தை வழங்குவதற்கு அனைத்து தரப்பினரையும் ஒன்றிணையுமாறு மீண்டும் அழைப்பு விடுக்கின்றேன்.”**

**இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**



Ranil

“அநுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் திட்டத்தினால் பிரதேசத்தின் விவசாய நடவடிக்கைகளுக்கும் குடிநீர் தேவைக்கும் தீர்வு கிடைக்கும், பல்வேறு தரப்பினர் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டபோதும் இந்த திட்டத்தினால் விவசாயத்திற்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது என உறுதியளிக்கின்றேன்.” - எனவும் ஜனாதிபதி கூறினார்.

மக்களுக்கு சுத்தமான குடிநீரை வழங்கும் நோக்கில் ஜெய்க்கா தியுதவியுடன் முன்னெடுக்கப்பட்ட அனுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் திட்டத்தின் முதலாம் கட்டம், அமைச்சர் ஜீவன் தொண்டமானின் அழைப்பின் பேரில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க , ஜெய்க்கா தலைவர் டனகா அகிஹிக்கோ ஆகியோரினால் நேற்று திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்று கையிலேயே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார். (அ)

# இடைநிறுத்தப்பட்டுள்ள ஜப்பானின் திட்டங்கள் விரைவில் மீள ஆரம்பம்!

கொழும்பு, பெப். 16

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் தலைவர் கலாநிதி தனக்கா அகிஹிக்கோவிற்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

புதிய பொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொள்வது கடினமான செயலாக இருந்தாலும் இலங்கையில் பொருளாதார சீர்திருத்தங்களை அமுல்படுத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அர்ப்பணிப்பை கலாநிதி தனக்கா அகிஹிக்கோ பாராட்டினார்.

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய விஸ்தரிப்புத் திட்டம், இலகு ரயில் திட்டம் மற்றும் மத்திய அதிவேக நெடுஞ்சாலை உள்ளிட்ட ஜப்பானிய உதவியின் கீழ் இந்நாட்டில் ஆரம்பிக்கப்பட்டு தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள திட்டங்களை துரிதமாக மீள ஆரம்பிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இங்கு தெரிவித்தார்.

கடந்த கால பொருளாதார நெருக்கடியின்போது, இலங்கைக்கு வழங்கிய தொடர்ச்சியான ஆதரவிற்காக ஜப்பானிய அரசாங்கம் மற்றும் ஜெய்காவிற்கும் ஜனாதிபதி நன்றி தெரிவித்தார்.

இலங்கையில் கடன் மறுசீரமைப்புப் பணிகள் நிறைவடைந்ததன் பின்னர் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள திட்டங்களை மீண்டும் ஆரம்பிக்க ஜெய்கா தயாராக இருப்பதாக கலாநிதி அகிஹிட்டோ மேலும் குறிப்பிட்டார்.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் சர்வதேச உறவுகள் விவகார பணிப்பாளர் தினுக் கொழும்பகே ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (அ)

# தற்கொலை செய்த ஜனாதிபதியாக வரலாற்றில் இடம்பிடிப்பார் அநுர!

## மொட்டு கட்சி எம்.பி கருத்து



கொழும்பு, பெப். 16

ஜனாதிபதி தேர்தலில் அநுர குமார திஸாநாயக்க வெற்றி பெறும் பட்சத்தில் நாட்டை ஆளமுடியாமல் தற்கொலை செய்துகொண்ட ஜனாதிபதியாக வரலாற்றில் இடம்பிடிப்பார் என்று பொதுஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி தெரிவித்தார்.

மொட்டு கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

“ஜே.வி.பி.இரட்டை நிலைப்பாட்டை பின்பற்றி வருகின்றது என்பது தற்போது உறுதியாகின்றது. அக்கட்சியினரால் போலி கருத்துகளே சமூகத்தில் விதைக்கப்படுகின்றன. எனவே, உண்மையை சொல்லி நாட்டை பொறுப்பேற்குமாறும், பொய்களை நிறுத்துமாறும் நாம் கோருகின்றோம்.

இலங்கை வரலாற்றில் மன்னர்களுக்கு பிறகு, அழுத்தம் காரணமாக நாட்டை ஆள முடியாமல் ஓடிய தலைவர்தான் கோட்டாபய ராஜபக்ச. அநுர குமார திஸாநாயக்க ஜனாதிபதி ஆகமாட்டார் என்பது உறுதி. சிலவேளை கனவிலாவது அவர் ஜனாதிபதியானால் அழுத்தம் தாங்க முடியாமல் தற்கொலை செய்துகொண்ட ஜனாதிபதியாக வரலாற்றில் இடம்பிடிப்பார். ஏனெனில் அந்தளவுக்கு பொய்யுரைக்கின்றனர்.

அத்துடன், இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்டு ஜே.வி.பியின் கொள்கைகளை அநுர குமார திஸாநாயக்க காட்டிக் கொடுத்துள்ளார்.” - என்றார். (அ)

# அரச பல்கலைக்கழகங்களில் பல்துறை பட்டங்களை வழங்க பேச்சுவார்த்தை!

கொழும்பு, பெப். 16

கல்வியில் சர்வதேச அனுபவமுள்ள நிபுணர்களின் அவதானத்திற்குப் பின்னர் அரச பல்கலைக்கழகங்கள் மூலம் பல்துறைப் பட்டங்களை வழங்குவதில் கவனம் செலுத்தியுள்ளதாக உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.

இலங்கையில் 3 சர்வதேச பல்கலைக்கழகங்களை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன்,

“03 சர்வதேச பல்கலைக்கழகங்களை இலங்கையில் ஸ்தாபிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். இவற்றில் இரண்டு பல்கலைக்கழகங்கள் ஆரம்பிப்பதற்கான பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு மே மாதத்திற்குள் மூன்றாவது பல்கலைக்கழகமும் இலங்கையில் ஸ்தாபிக்கப்படும்.

கண்டியில் இந்திய தொழில்நுட்ப நிறுவனம் ஆரம்பிக்கப்பட உள்ளது. ஏனைய இரண்டு பல்கலைக்கழகங்களும் அமெரிக்கா மற்றும் ஐக்கிய இராச்சியத்தை மையமாக கொண்டு அவற்றின் இரண்டு கிளைகள் திறக்கப்படவுள்ளதுடன் அவை தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவும் தயாராக உள்ளோம்.

விஜயதாச குழுவின் அறிக்கை மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் குழு அறிக்கையை இணைத்து புதிய உயர்கல்வி அபிவிருத்தி ஆணைக்குழுவை ஆரம்பிப்பதற்கான ஆரம்பகட்ட கலந்துரையாடல்கள் தற்போழுது இடம்பெற்று வருகின்றன. குழுவின் தலைவர் பதவிக்கு, முன்னாள் பிரதம நீதியரசர் கே. ஸ்ரீபவனை நியமிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். அதற்கான சட்டக் கட்டமைப்பு தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டு, சட்ட வரைவை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், அரச பல்கலைக்கழகங்களில் பல்துறை பட்டங்களை வழங்குவதற்கான கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இலங்கைக்கு வருகை தருமாறு அவுஸ்திரேலிய உயர்கல்வி அமைச்சருக்கு அவுஸ்திரேலிய தூதரகத்தின் ஊடாக அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. மெல்பேர்ன், சிட்னி பல்கலைக்கழகம் உட்பட 10 பல்கலைக்கழகங்களுடன் தொடர்புள்ள நிபுணத்துவ அறிவுள்ள வேந்தர்களும் இலங்கைக்கு வருகை தர உள்ளனர். எமது கல்வி நிலைமையை ஆய்வுசெய்த பின்னர் மேற்கொள்ள வேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடவும் எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், தனியார் உயர்கல்வித் துறையை முறைப்படுத்த வேண்டும். ஆனால் கல்வித்துறையை விற்பனை செய்வதற்கு நாம் தயாரில்லை என்பதையும் குறிப்பிட வேண்டும்” என்றும் உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ)

# சஜித் அணிக்குள் கறுப்பு ஆட்டை களமிறக்கியுள்ள பஸில் ராஜபக்ஷ

## பொன்சேகா பரபரப்பு தகவல்

கொழும்பு, பெப். 16

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா... முன்னாள் இராணுவத் தளபதி தயா ரத்னாயக்கவை பஸில் ராஜபக்சவே ஐக்கிய மக்கள் சக்திக்குள் களமிறக்கியுள்ளார் என தகவல் கிடைத்துள்ளது என்று அக்கட்சியின் தவிசாளர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

“ஜனாதிபதி பதவியில் இருந்து ஓய்வுபெற்றவர்கள் மீண்டும் அரசியலுக்கு வருவதை நான் எதிர்க்கின்றேன். மஹிந்த ராஜபக்ச போன்ற தலைவர் மீண்டும் ஆட்சிக்கு வந்தால்தான் மக்கள் அச்சப்பட வேண்டும். ஏனெனில் பழிவாங்குவார்கள், சித்திரவதைகளுக்கு உட்படுத்துவார்கள், சிறைகளில் அடைப்பார்கள்.

ராஜபக்சக்களின் கதை முடிந்துவிட்டது என நினைத்துக் கொண்டிருந்தாலும் எமது நாட்டு அரசியல் கலாசாரம் பிரகாரம், அவர்கள் இலகுவில் அரசியலில் இருந்து விடுபட போவதில்லை. பண பலம் உள்ளது, நாடு பூராகவும் அவர்களின் சகாக்கள் உள்ளனர். பஸில் ராஜபக்சவே தயா ரத்னாயக்கவை ஐக்கிய மக்கள் சக்திக்குள் அனுப்பியுள்ளார் என எனக்கு தகவல் கிடைத்துள்ளது.

ராஜபக்சக்கள் அவ்வளவு எளிதில் அரசியலை விடமாட்டார்கள், எதிர்க்கட்சி தலைவர் பதவியை கைப்பற்றுவதற்கேனும் முற்படுவார்கள்.” - என்றார். (அ)

# 2023இல் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் 10,000 முறைப்பாடு!

கொழும்பு, பெப். 16

2023 ஆம் ஆண்டில் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் 10,000 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் உதயகுமார அமரசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் 2,242 முறைப்பாடுகளும், பாலியல் துன்புறுத்தல்கள் தொடர்பில் 472 முறைப்பாடுகளும், கடுமையான பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பில் 404 முறைப்பாடுகளும், சிறுமிகள் துஷ்பிரயோகம் தொடர்பில் 51 முறைப்பாடுகளும், சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவது தொடர்பில் 06 முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, 2022 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடுகளை விட 2023 ஆம் ஆண்டு அதிகளவான முறைப்பாடுகள் கிடைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# அதிகரிக்கப்பட்ட வற் வரியை மிகவிரைவில் குறைப்போம்!

## ஐக்கிய தேசிய கட்சி தெரிவிப்பு

கொழும்பு, பெப். 16

**மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் அதிகரிக்கப்பட்ட வற்வரி இன்னும் சில மாதங்களில் குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும். அத்துடன் தற்போதுள்ள ஆட்சி முறையில் செல்வதா மாற்றத்தை ஏற்படுத்துவதா என்பதே மக்களுக்கு இருக்கும் சவாலாகும் என ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆஷூ மாரசிங்க தெரிவித்தார்.**

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வீழ்ச்சியடைந்திருந்த நாட்டின் பொருளாதாரத்தை மீள கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கும்போது சில கடுமையான தீர்மானங்களை எடுப்பது தவிர்க்க முடியாத விடயமாகும். இதனால் நாட்டு மக்கள் அனைவருக்கும் ஏதோ ஒருவகையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளனர். பொருளாதார ரீதியில் மக்களுக்கு பாரிய நெருக்கடி நிலைமை ஏற்பட்டிருப்பதை நாங்கள் உணர்ந்து வருகிறோம். இந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அரசாங்கம் படிப்படியாக நடவடிக்கை எடுத்து வருகிறது.

குறிப்பாக 2022இல் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாட்டை பொறுப்பேற்கும்போது திறைசேரியில் 852 பில்லியன் ரூபா மறை பெருமானத்திலேயே இருந்தது. ஆனால் 2023 நிறைவடையும்போது எமது அடிப்படை செலவுகளுக்கு ஒதுக்கிய பின்னர் திறைசேரியில் 52 பில்லியன் ரூபா மீதமாகி இருந்தது. அனைவரின் அர்ப்பணிப்பின் மூலமே இதனை செய்ய முடியுமாகியது. விசேடமாக நிதி அமைச்சின் அதிகாரிகள் திறைசேரியின் அதிகாரிகள் மிகவும் அர்ப்பணிப்புடன் மேற்கொண்ட சேவையின் மூலமே இந்த இலக்கை எமக்கு எட்ட முடிந்தது.

மேலும் இந்த பொருளாதார அபிவிருத்திக்கு வற் வரி அதிகரிக்கப்பட்டதுடன் நாட்டுக்குக் கிடைக்க வேண்டிய வருமானங்களை முறையாகச் சேர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதேபோன்று நாட்டுக்கு கிடைக்க வேண்டிய வரி வருமானங்களைப் பெற்றுக் கொள்ள முறையான வேலைத் திட்டங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இதன் காரணமாக தற்போது அரசாங்கம் எதிர்பார்த்த வருமானங்கள் கிடைக்கப்பெற்று வருவதால், இறுதியாக அதிகரிக்கப்பட்ட வற்வரியை மீண்டும் நூற்றுக்கு 15வீதமாக குறைப்பதற்கு அரசாங்கம் கவனம் செலுத்தி இருக்கிறது. இன்னும் ஒரு சில மாதங்களில் வற் வரியை நூற்றுக்கு 15வீம் வரை குறைத்து மக்களுக்கு நிவாரணம் வழங்க எதிர்பார்க்கிறோம்.

மேலும் நாடு ஸ்திர நிலையை அடைந்துவரும் நிலையில் நாட்டில் ஆட்சி மாற்றம் ஒன்றை ஏற்படுத்தி, தற்போது முன்னெடுத்துச்செல்லப்படும் ஆட்சி முறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதா அல்லது பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப அமைக்கப்பட்டிருக்கும் வேலைத்திட்டத்தை அவ்வாறே தொடர்ந்து முன்னுக்குக் கொண்டு செல்வதா என்பதே மக்கள் முன்னால் இருக்கும் சவாலாகும். அதனால் மனங்களை மாற்றும் வார்த்தைகளுக்கு ஏமாந்துவிடாமல் மக்கள் சிந்தித்து செயற்பட வேண்டும்-என்றார்.

(அ)

# வட்டுக்கோட்டையில் விபத்து; இருவர் வைத்தியசாலையில்!



யாழ்ப்பாணம், பெப். 16

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட, வட்டுக்கோட்டை சந்திக்கு அண்மித்த பகுதியில் நேற்று வியாழக்கி ழமை காலை இரண்டு முச்சக்கர வண்டிகள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது, இருவர் படுகாயமடைந்த நிலையில் அவசர நோயாளர் காவுவண்டி மூலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அதிக வேகம் காரணமாக இந்த விபத்து சம்பவித்துள்ளதாக கூறப்படுகிறது. இச்சம்பவம் குறித்து வட்டுக்கோட்டை பொலிஸ் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)

# சமூக வலைத்தளங்களை பயன்படுத்தி நிதி மோசடி

கொழும்பு, பெப். 16

கம்பஹாவில் சமூக வலைத்தளங்களை பயன்படுத்தி நிதி மோசடிகளில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றவியல் விசாரணை திணைக்களத்தின் கணினி குற்றப்பிரிவினரால் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சந்தேகநபர்கள் பல்வேறு தரப்பினரிடம் இவ்வாறு நிதி மோசடியில் ஈடுபட்டதாக கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய, கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

சந்தேகநபர்கள் கம்பஹா - வேபட பகுதியை சேர்ந்தவர்கள் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

சந்தேகநபர்களிடம் இருந்த தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், தொலைபேசி என்பன குற்றவியல் விசாரணை திணைக்களத்தினரால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது.

(அ)

# 25 இலங்கையர்களை நாடு கடத்திய மாலைதீவு!

கொழும்பு, பெப். 16

மாலைதீவில் இடம்பெறும் சட்டவிரோத வர்த்தகங்களை கட்டுபடுத்தும் வகையில் 25 இலங்கையர்கள் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

கடவுச்சீட்டு விதிகளை மீறிய குற்றங்கள் மற்றும் போதைப் பொருள் குற்றங்களில் ஈடுபட்ட 161 ஏனைய நாட்டவர்களும் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

இதன்படி, 186 வெளிநாட்டவர்கள் மாலைத்தீவிலிருந்து நாடு கடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த நாட்டு ஊடகமொன்று வெளியிட்டுள்ள செய்தியிலேயே குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 43 இந்தியர்கள், 25 இலங்கையர்கள், 8 நேபாளிகள் மற்றும் 83 பங்களாதேசியர்கள் உள்ளிட்ட 186 பேர் இவ்வாறு நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

எவ்வாறாயினும், இவர்கள் நாடு கடத்தப்பட்ட திகதி குறித்து இதுவரையில் அறிவிக்கப்படவில்லை என்றும் அந்த செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(அ)

# விவசாயிகளுக்கு புதிய கடன் திட்டம்

கொழும்பு, பெப். 16

விளைச்சலுக்கான நிர்ணய விலை தொடர்பான பிரச்னையை நிவர்த்திப்பதற்கான புதிய திட்டமொன்று அரசாங்கத்தினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய, சிறு மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்கள், நெல் களஞ்சியசாலை உரிமையாளர்கள், மொத்தமாக நெல்லை சேகரிப்பாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை நிவர்த்திக்கும் வகையில் இம்முறை பெரும்போகத்தின் போது நெல் கொள்வனவு செய்வதற்காக "மடபன" கடன் திட்டத்தை செயற்படுத்த தீர்மானித்திருப்பதாக ஜனாதிபதியின் பொதுமக்கள் அலுவல்கள் பணிப்பாளர் நாயகம் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

சிறு மற்றும் நடுத்தர தர அரிசி உற்பத்தி தொழில்துறையினர் எதிர்கொண்டிருக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பிலேயே அவர் இதனை கூறியுள்ளார்.

மக்கள் வங்கி, இலங்கை வங்கி மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கி ஆகியவற்றினால் இந்த கடன் வசதி வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த கடன் திட்டத்தின் கீழ், 9 பில்லியன் ரூபா கடன் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு அதிகபட்சமாக 50 மில்லியன் ரூபாவும் நெல் களஞ்சியசாலை உரிமையாளர்களுக்கும் தொகை நெல் சேகரிப்பாளர்களுக்கும் அதிகபட்சமாக 25 மில்லியன் ரூபா வரை கடன் வழங்கப்படவுள்ளது.

கடனை திருப்பிச்செலுத்த 180 நாட்கள் கால அவகாசம் வழங்கப்படுவதுடன், 15 வீத வருட வட்டியில் 4 வீதம் திறைசேரியினால் அந்தந்த வங்கிகளுக்கு வழங்கப்படும். அதன்படி, கடன் பெறுநர்கள் 11 வீதத்தை மாத்திரம் வருட வட்டியாக செலுத்த வேண்டும்.

விவசாயிகளுக்கு சிறந்த விலையை பெற்றுக்கொடுப்பதோடு, மக்களுக்கும் நியாயமான விலையில் அரிசியை பெற்றுக்கொடுப்பதே இந்த கடன் திட்டத்தின் நோக்கமாகும் எனவும் கீர்த்தி தென்னக்கோன் மேலும் தெரிவித்துள்ளார்.

(அ)

# 2 இலட்சத்திற்கும் அதிகமான வணிகங்கள் மூடப்பட்டுள்ளன

கொழும்பு, பெப். 16

கொவிட் தொற்று நோய்க்குப் பின்னர் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக நுண், சிறு மற்றும் நடுத்தர அளவிலான வணிகங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த தொற்று நோய் காரணமாக பாரியளவான வணிகங்கள் மூடப்பட்டுள்ளதாக மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சுமார் இரண்டு லட்சத்து அறுபத்து மூவாயிரம் வணிகங்கள் மூடப்பட்டுள்ளதாக மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் அண்மைய ஆய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொவிட் தொற்றுநோய்க்குப் பின்னர் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் விளைவுகளை கண்டறிவதற்கு, மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் கடந்த வருடம் மார்ச் முதல் ஜூன் மாதம் வரை நிறுவன அளவிலான மதிப்பீட்டை மேற்கொண்டது.

இந்த ஆய்வில் நுண், சிறு மற்றும் நடுத்தர வர்த்தக நிறுவனங்கள் உள்ளடக்கப்பட்டதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

# சுங்கத்துறை அதிகாரிகள் தொழிற்சங்க நடவடிக்கை

கொழும்பு, பெப். 16

சுங்க அதிகாரிகள் சட்டப்படி வேலை செய்யும் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

சம்பள முரண்பாடுகள், பதவி உயர்வு வழங்கப்படாமை மற்றும் ஊழியர்கள் பற்றாக்குறை உள்ளிட்ட பல்வேறு சிக்கல்களுக்கு தீர்வு வழங்குமாறு கோரி இந்த தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

தமது சிக்கல்களுக்கு தீர்வு வழங்கப்படும் வரை தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என சுங்க அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் அமில சஞ்ஜீவ தெரிவித்துள்ளார்.

நாட்டிற்கு பிரதானமான வருமானத்தை ஈட்டித்தரும் நிறுவனமாக சுங்கத் திணைக்களம் காணப்பட்ட போதிலும், தற்போது கடுமையான ஊழியர் பற்றாக்குறை நிலவுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுங்க சேவையை பலவீனப்படுத்துவதற்கே அதிகாரிகள் முயற்சிப்பதாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கடந்த 04 வருடங்களுக்கு முன்னதாக புதிதாக சேவையில் இணைத்துக்கொள்ளப் பட்டவர்களுக்கு உரிய பதவி நிலைகள் மற்றும் சம்பள கொடுப்பனவுகள் வழங்கப்படாதுள்ளதாகவும் சுங்க அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், சுங்க மனித வள முகாமைத்துவ பிரிவின் செயல்திறன் இன்மை காரணமாகவே இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுவதாகவும் அந்த பிரிவின் பிரதானி பதவி விலக்கப்பட்டு பொருத்தமான நபர் நியமிக்கப்பட வேண்டுமென வும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

(அ)

# எதிரணியின் உறுப்பினர்கள் அரசுடன் ஒன்றிணைவார்கள்

## கூறுகிறார் பியல் நிஷாந்த



கொழும்பு, பெப். 16

**பொதுஜன பெரமுனவை எவராலும் வீழ்த்த முடியாது. பரந்துப்பட்ட அரசியல் கூட்டணி ஊடாக எமது பலத்தை மீண்டும் உறுதிப்படுத்துவோம்.எதிர்க்கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் ஒன்றிணைவார்கள் என கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த டி சில்வா தெரிவித்தார்.**

களுத்துறை பகுதியில் உள்ள பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கத்தை பொறுப்பேற்க தயார் என தற்போது குரல் எழுப்பும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க ஆகியோர் 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்த போது அரசாங்கத்தை பொறுப்பேற்க முன்வரவில்லை.


நெருக்கடியான சூழ்நிலையில் அரசாங்கத்தை பொறுப்பேற்றால் தமது எதிர்கால அரசியல் இருப்புக்கு பாதிப்பு ஏற்படும் என்பதால் எதிர்க்கட்சித் தலைவர் உட்பட மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அரசாங்கத்தை பொறுப்பேற்காமல் கதை பேசிக் கொண்டிருந்தார்கள்.

மாறுப்பட்ட அரசியல் கொள்கையினை கொண்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்து அவர் தலைமையில் அரசாங்கத்தை ஸ்தாபித்தோம். அரசியல் காரணிகளுக்கு முன்னுரிமை வழங்காமல் நாட்டுக்காக ஒன்றிணைந்து செயற்பட்டதால் நாடு தற்போது இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளது. பாரிய பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சிப் பெற்றுள்ளோம்.

பொருளாதார பாதிப்பை தொடர்ந்து பொதுஜன பெரமுன வீழ்ச்சியடைந்து விட்டது என்று எதிர்க்கட்சியினர் தவறான நிலைப்பாட்டை தோற்றுவித்துள்ளார்கள். பொதுஜன பெரமுனவை எவராலும் வீழ்த்த முடியாது. பரந்துப்பட்ட அரசியல் கூட்டணி ஊடாக எமது பலத்தை மீண்டும் உறுதிப்படுத்துவோம்.

எதிர்க்கட்சித் தலைவருடன் ஒன்றிணைந்து செயற்பட முடியாது என்பதை எதிரணியின் உறுப்பினர்கள் நன்கு விளங்கிக் கொண்டுள்ளார்கள். எதிரணியின் பெரும்பாலான உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் ஒன்றிணைவார்கள்-என்றார். (அ)

# யாழில் ஐஸ்கிறீமில் தவளை



யாழ்ப்பாணம், பெப். 16

தொண்டமானாறு பகுதியில் உள்ள விற்பனை நிலையத்தில் தவளையுடன் ஐஸ் கிறீம் வழங்கப்பட்ட சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

தொண்டமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலய சூழலில் உள்ள குளிர்பான விற்பனை நிலையமொன்றிலே நேற்று முன்தினம் ஐஸ் கிறீம் குடிக்க சென்ற வருக்கே குறித்த அனுபவத்தை எதிர்கொண்டுள்ளார்.

இந்நிலையில், குறித்த குளிர்பான விற்பனை நிலையத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (அ)

# 3 மாணவிகளுக்குத் தொல்லை கொடுத்த பாடசாலை ஆசிரியர் பொலிஸாரால் கைது!

கொழும்பு, பெப். 16

ஹற்றன் பிராந்திய கல்வி அலுவலகத்துக்கு உட்பட்ட பிரதேச பாடசாலை ஒன்றில் பாடசாலை மாணவிகள் மூவருக்கு தொல்லை கொடுத்த குற்றச்சாட்டில் அதே பாடசாலையின் ஆசிரியர் சந்தேகத்தின் பேரில்கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த ஆசிரியர் பாடசாலையில் பத்தாம் வகுப்பு கற்கும் மூன்று மாணவிகள் மீது தொல்லைகளைப் பிரயோகிக் முயற்சித்ததாகவும் அவர்களுக்கு குறுஞ்செய்தி அனுப்பி அசௌகரியம் ஏற்படுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபரின் குறுஞ்செய்திகளுக்கு பதில் அளிக்காததால், வகுப்பறையில் அமர்ந்திருந்த அந்த மாணவிகள் மீது தேவையற்ற அழுத்தங்கள் பிரயோகித்தால் சம்பந்தப்பட்ட மாணவிகள் வட்டவளை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதன்படி, வட்டவளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் சந்தன கமகேவின் உத்தரவில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார். (அ)

# மாணவரை தாக்கிய இருவர் கைது

கொழும்பு, பெப். 16

பாடசாலையில் எழுதும் மேசை தொடர்பில் ஏற்பட்ட வாக்குவாதம் காரணமாக பாடசாலை மாணவர் ஒருவரை தாக்கியதாக கூறப்படும் இருவரை கைது செய்வதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மெல்சிறிபுர பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மெல்சிறிபுர - உடம்பிட்ட பிரதேசத்தில் இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

மெல்சிறிபுர - கெந்தலவ - விகாரகம பிரதேசத்தில் வசிக்கும் 15 வயதுடைய மாணவன் ஒருவரே இவ்வாறு தாக்கப்பட்டுள்ளார். இவர் ரிதிகம - உதம்மித மகா வித்தியாலயத்தில் 11ஆம் ஆண்டில் கல்வி கற்று வருகிறார்.

நேற்று முன் தினம் பாடசாலையில் தவணை பரீட்சையை முடித்துவிட்டு வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த போது, மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், பாதுகாப்பு ஹெல்மெட் மற்றும் மூங்கில் குழாயால் தம்மை தாக்கியதாக, மாணவர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

தாக்குதல் நடத்தியவர்கள் கொகரெல்ல - முஹம்வல பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என தாம் அடையாளம் கண்டுள்ளதாகவும் மாணவர் தெரிவித்துள்ளார்.

சுமார் ஒரு வாரத்திற்கு முன்னர், பாடசாலையில் எழுதும் மேசை தொடர்பாக தமக்கு மற்றுமொரு மாணவனுடன் தகராறு ஏற்பட்டதாகவும், தம்முடன் தகராறு செய்த மாணவனின் நண்பர் ஒருவர் தொலைபேசியில் தன்னை அச்சுறுத்தியதாகவும் சம்பவத்தை எதிர்கொண்ட மாணவர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

தன்னை தாக்கிய இருவரில் தன்னை அச்சுறுத்தியவரும் இருந்ததாகவும் அந்த மாணவன் குறிப்பிட்டுள்ளார். சந்தேக நபர்களை கைது செய்வதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மெல்சிறிபுர பொலிஸார் தெரிவிக்கின்றனர். (அ)

# கசிப்பு குடித்த மாணவன் பாடசாலையில் சுகயீனமுற்றதால் வைத்தியசாலையில்!

கொழும்பு, பெப். 16

பசறை பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கசிப்பு அருந்திய நிலையில் ஏற்பட்ட சுகவீனம் காரணமாக மாணவன் ஒருவன் பதுளை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்த மாணவனுக்கு திடீரென உடல்நலக்குறைவு ஏற்பட்டு வாந்தி எடுத்தார். இது குறித்து ஆசிரியர்கள் அவரிடம் கேட்டபோது, பாடசாலைக்கு அருகே உள்ள பிரதான வீதியில் வைத்து தான் கசிப்பு அருந்தியதாக கூறினார்.

இதனையடுத்து அந்த மாணவன் உடனடியாக பசறை ஆதார வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

தான் கசிப்பு அருந்தியதனை குறித்த மாணவன் வைத்தியசாலையில் கூறியதன் அடிப்படையில் மேலதிக சிகிச்சைக்காக பதுளை போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக பசறை ஆதார வைத்தியசாலையில் வட்டாரங்கள் தெரிவித்தன. (அ)

# ஜனாதிபதி ரணிலை ஆதரிப்பது நாட்டை நேசிப்போரின் கடமை

## அமைச்சர் பிரசன்ன வலியுறுத்து

கொழும்பு, பெப். 16

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளிக்க போவதாகவும் அவரை ஆதரிக்க வேண்டியது பொதுஜன பெரமுன உட்பட நாட்டை நேசிக்கும் அனைவரதும் கடமை எனவும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கண்டி மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் கலந்துக்கொண்ட பின்னர் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே பிரசன்ன இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மற்றுமாரு சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும் என்பது எனது தனிப்பட்ட நிலைப்பாடு.

வேலை செய்த, மக்கள் நம்பிக்கை வைத்துள்ள, சவாலை ஏற்றுக்கொண்ட, பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடிந்த தலைவரிடம் நாட்டை ஒப்படைப்பது சிறந்தது என்பது எனது நிலைப்பாடு.

ரணில் விக்ரமசிங்கவை திட்டி, விமர்சிக்காதவர்கள் இல்லை. என்னை போல் அவரை விமர்சித்தவர்கள் எவரும் இருக்க மாட்டார்கள். கட்சி என்ற முறையில் நாட்டுக்காக ஒரு அடியை பின்நோக்கி வைக்கிறோம். சவாலை ஏற்றுக்கொள்ளக் கூடிய தலைவராக ரணில் விக்ரமசிங்க மாத்திரமே இருக்கின்றார்.

பொதுஜன பெரமுன ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதை இன்னும் தீர்மானிக்கவில்லை. இந்த சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மற்றுமொரு வாய்ப்பை வழங்க வேண்டும்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எப்போது நாட்டை பற்றி சிந்தித்தே முடிவுகளை எடுத்தது. இதனால், எமது கட்சி சரியான நேரத்தில் சரியான முடிவை எடுக்கும் என நம்புகிறேன்.

ஜனாதிபதி தேர்தலை ஒத்தி வைக்கும் எவ்வித தயார்நிலையிலும் அரசாங்கம் இல்லை. தேர்தலுக்கு தேவையான நிதியும் ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளது.

மக்கள் ஆதரவில் மக்கள் விடுதலை முன்னணி முதலிடத்தில் இருப்பதாக சமூக ஊடகங்களில் கூறப்படுகிறது.

எனினும் கடந்த ஜனாதிபதி தேர்தலில் அந்த கட்சி 5 லட்சம் வாக்குகளையே பெற்றது. அவர்களுக்கான ஆதரவு நூறு வீதம் அதிகரித்திருந்தாலும் 10 லட்சம் வாக்குகளையே பெறுவார்கள். ஆயிரம் வீதம் அதிகரித்தாலும் 50 லட்சம் வாக்குகளையே பெறுவார்கள்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாச தோல்வியடைந்தாலும் 56 லட்சம் வாக்குகளை பெற்றார். இதனால், நாட்டில் உள்ள எந்த கட்சியும் தனக்கான ஆதரவை 10 வீதத்தினால் அதிகரித்துக்கொள்ளவில்லை.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு பின்னர், நாட்டின் சகல ஜனாதிபதிகளும் கூட்டணியின் மூலமே தெரிவு செய்யப்பட்டனர். கூட்டணி அமைக்காமல் தனித்து போட்டியிட்டு வெற்றி பெற முடியாது.

அத்துடன் தேசிய பிரச்னைகளை அடிப்படையாக கொண்டே ஜனாதிபதிகள் தெரிவு செய்யப்படுகின்றனர். போரை வென்று அமைதியை ஏற்படுத்தவே மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார்.

அவர் அதனை செய்தார். நாட்டில் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த இரண்டாவது முறையாக அவர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார்.

அதன் பின்னர் நல்லாட்சியை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கில் ஜனாதிபதியை மக்கள் தெரிவு செய்தனர். நல்லாட்சி ஏற்படுத்தப்பட்டதா இல்லையா என்பது வேறு விடயம்.

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்பதற்காக ஜனாதிபதி ஒருவரை தெரிவு செய்தோம். தற்போது இருப்பது பொருளாதார நெருக்கடி, ரணில் விக்ரமசிங்க மாத்திரமே அந்த சவாலை ஏற்றுக்கொண்டார். அவர் மாத்திரமே சவாலை ஏற்கும் தலைவராக இருக்கின்றார்-என்றார். (அ)

# படகை வெள்ளோட்டம் விட கடலுக்குச் சென்றவர் பலி!

மட்டக்களப்பு, பெப். 16

**மட்டக்களப்பு- களுவங்கேணி கடலில் மூழ்கி இளைஞன் உயிரிழந்துள்ள சம்பவம் இடம்பெற்றுள்ளது.**

இச்சம்பவத்தில் களுவங்கேணி-சிங்காரத்தோப்பு பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய பாலசுந்தரம் ஜெஸ்குமார் என்பவரே உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் ஏத்துக்கால் கடல் பகுதியில், புதிய படகு ஒன்றை வெள்ளோட்டம் பார்ப்பதற்காக கடலுக்கு சென்றபோது, திடீரென ஏற்பட்ட பலத்த காற்று காரணமாக படகு திசைமாறிச் சென்றவேளை சடுதியாக படகிலிருந்து கடலுக்குள் பாய்ந்து படகினை நேர்த் திசைக்கு கொண்டுவர முயன்றபோது ஏற்பட்ட சுழியினால் அவர் இழுத்துச் செல்லப்பட்டு நீரில் மூழ்கியுள்ளதாக தெரியவந்துள்ளது.

பின்னர் ஏனைய மீனவர்களின் உதவியுடன் சடலம் மீட்க்கப்பட்டு மாவடிவேம்பு பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட் டுள்ளதுடன், திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.எம்.நஸீர் மரண விசாரணையினை நடத்தியுள்ளதாக ஏறாவூர்ப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

## ஆசிரியர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு



அம்பாறை, பெப். 16

அக்கரைப்பற்று கல்முனை மாவட்ட சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் சாரணர்த்துறையில் கலைக்கூறு ஒன்று முடித்த ஆசிரியர்களுக்கான சானன்றிதழ் வழங்கும் நிகழ்வு அக்கரைப்பற்று அஸ்ஸிறாஜ் மாகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

மாவட்ட சாரண ஆணையாளர் எம்.ஐ.உதுமாலெவைவை தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் மாவட்ட சாரணர் சங்கத்தின் தவிசாளர் யூ.எல்.எம்.ஹாசீம்,உட்பட உதவி மாவட்ட ஆணையாளர்கள், சங்கத்தின் உறுப்பினர்கள், சாரண ஆசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

## வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு உலருணவு



அம்பாறை, பெப். 16

வருமானம் குறைந்த மற்றும் வாழ்வாதார ரீதியில் பாதிப்புற்ற பெண் தலைமை தாங்கும் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு உலருணவுப் பொதி வழங்கும் நிகழ்வு செக்டோ சிறிலங்கா சமூக சேவை நிறுவனத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

அமைப்பின் தலைவர் சட்டத்தரணி ஏ.எல்.நியாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சமூக சேவை உத்தியோகத்தர் ஏ.ஜி.அஸ்ரத், செக்டோ நிறுவனத்தின் உப தலைவர் எம்.எச்.றம்சான், பொருளாளர் ஏ.எல்.றிம்ஸான், அமைப்பாளர் ஏ.எல்.றியாஸ், ஊடக இணைப்பாளர் ஏ.ஆர்.எம்.றிம்சான், உறுப்பினர் ஏ.எல்.எம். புஹாரி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (அ)

## கல்விப் பணியாற்றியவர்களுக்கு கௌரவம்

அம்பாறை, பெப். 16

அட்டாளைச்சேனை நலன் புரி அமைப்பு ஏற்பாடு செய்த கல்வி விருது விழா நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு லொய்ட்ஸ் மண்டபத்தில் மிகவும் பிரம்மாண்டமாக நடைபெற உள்ளது.

அட்டாளைச்சேனை கல்விக் கோட்டத்தில் புதிதாக அதிபர்களாக நியமிக்கப்பட்டவர்களை பாராட்டி கௌரவிப்பதோடு கடந்த காலங்களில் சிறப்பாக பணியாற்றி ஓய்வு பெற்ற அதிபர்களும் இவ் விழாவில் கௌரவிக்கப்படவுள்ளனர்.

அட்டாளைச்சேனை நலன் புரி அமைப்பின் தலைவர் எம். ஜே.எம்.அன்வர் நௌஷாத் தலைமையில் இடம் பெறும் இந்நிகழ்வுக்கு முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாகவும் முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான எச்.எம்.எம். ஹரிஸ், முஸ்லிம் காங்கிரஸின் பொருளாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான பைசல் காசிம், கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் எம் எஸ் உதுமாலெப்பை, கிழக்கின் கேடயத்தின் தலைவரும், அக்கரைப்பற்று அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளன முன்னாள் தலைவருமான எஸ் எம் சபீஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அட்டாளைச்சேனை அமைப்பாளர் ஏ கே அமீர், ஏசி. என்.நிறுவனத்தின் பணிப்பாளர் ஏசி நியாஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மாவட்ட குழு செயலாளர் ஏ.சி. சமால்தீன், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அட்டாளைச்சேனை அமைப்பாளர் எஸ்.எல்.ஏ.ஹலீம், முஸ்லிம் காங்கிரஸின் பாலமுனை அமைப்பாளர் ஏ.எல்.அலியார், முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினர் ஏ.எஸ்.எம்.உவைஸ் உட்பட பல முக்கிய பிரமுகர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (அ)

## பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்குதல்



அம்பாறை, பெப். 16

பட்டிருப்பு வலயக்கல்வி அலுவலக முறைசாராக் கல்விப் பிரின் ஒழுங்கு படுத்தலில் களுதாவளை சமூக பொருளாதார அபிவித்திச்சங்கம் கட்டாரில் தொழில் புரியும் உற வுகளின் பிரதான அனுசரணையில் வருடாவருடம் பொருளாதார நிலையில் பின்தங்கிய மாணவர்களை அந்நிலையிலிருந்து மீட்டு இடைவிலகலைத் தவிர்த்து தொடர் கல்வியை பெறுவதற்காக கற்றல் உபகரணங்களை வழங்குகின்ற நிகழ்வின் முதல் கட்டம் பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் களுவாஞ்சிகுடியில் முறைசாராக்கல்வி இணைப்பாளர் திருமதி.றீற்றா கலைச்செல்வனின் ஏற்பாட்டில் பட்டிருப்பு வலயக்கல்விப்பணிப்பாளர் திரு. சிவானந்தம் சிறீதரன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இதில் பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலக பிரதிக்கல்விப் பணிப்பாளர் மாணவர் அபிவிருத்தி திரு. இ.ஜீவானந்தராசா, சீடா அமைப்பின் தலைவர் திரு. க.கிசோபன், சீடா அமைப்பின் உறுப்பினர்கள், பட்டிருப்பு கல்வி வலயத்தின் மண்முனை தென் எருவில்பற்று கோட்ட பாடசாலைகளின் அதிபர்கள், முறைசாராக்கல்வி உத்தியோகத்தர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், வளவாளர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர். (அ)



## மாற்றுத்திறனாளிகளுக்கு சுயத்தொழில் உபகரணம்

மட்டக்களப்பு, பெப். 16

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் வழிகாட்டுதலின் பேரில் சமூக சேவைகள் அமைச்சு நடத்திய மாற்றுத்திறனாளிகளை கௌரவிக்கும் நிகழ்வு மட்டக்களப்பில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த சுய தொழில் உபகரணங்களும், பொழுதுபோக்குக்காக அவர்களின் வீடுகளுக்கு தொலைக்காட்சிகளும் செந்தில் தொண்டமானால் வழங்கி வைக்கப்பட்டது.

இதற்மைய ,சாதனைகள் நிகழ்த்திய தேர்ந்தெடுக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு விருதுகளும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## அபிவிருத்தி குழு கூட்டத்தில் அதாவுல்லா பிரச்னைகளை பேச விடாது தடுக்கிறார்!

மட்டக்களப்பு, பெப். 16

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அதாவுல்லா கலந்து கொண்டு மாவட்ட பிரச்னைகளை பேச விடாது தடுக்கிறார் என மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராசாணக்கியன் தெரிவித்துள்ளார்.

அவரது அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அதாவுல்லா எவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி குழு இணைத் தலைவராக தெரிவு செய்யப்பட்டார் என்று தெரியவில்லை இவருக்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பிரச்சனைகள் தொடர்பாக எதுவும் தெரியாது.

கடந்த கால கூட்டங்களில் ஒவ்வொரு தலைப்பிலும் பேசி ஆராயப்படும் அதாவது கல்வி, சுகாதாரம், விவசாயம் என வரும் அதன் ஒழுங்கில் கூட்டத்தில் ஆராயப்பட்டு தீர்வு காணப்படும்.

ஆனால் தற்போதைய கூட்டத்தில் சரியான ஒழுங்கில் கூட்டம் இடம்பெறாது அவர்களுக்கு ஏற்றாற்போல் கூட்டத்தை நடத்துகின்றார்கள்- என்றார். (அ)

# ஹமாஸ் தலைவர் தப்பிச் செல்லும் வீடியோவை வெளியிட்ட இஸ்ரேல்!

ஜெருசலேம், பெப். 16

**ஹமாஸ் தலைவர் யஹ்யா சின்வார் தனது குடும்ப உறுப்பினர்கள் பலருடன் காசா சுரங்கப்பாதை வழியாக நடந்து செல்லும் காட்சிகளை இஸ்ரேல் பாதுகாப்புப் படை செவ்வாயன்று வெளியிட்டது.**

**அந்த வீடியோவில் இருப்பது சின்வார் என்பது உறுதிப்படுத்தப்பட்டால், ஹமாஸின் ஒக்ரோபர் 7 தாக்குதலுக்கு முன்னதாக சின்வார் தலைமறைவாகிய பிறகு அவர் காணப்படுவது இதுவே முதல் முறையாகும்.**



இஸ்ரேல் இராணுவடிசெய்தித் தொடர்பாளர் டேனியல் ஹகாரி இந்த காட்சிகளை வெளியிட்டார்.

இஸ்ரேல், அமெரிக்கா, கட்டார் மற்றும் எகிப்திய உயர் மட்ட அதிகாரிகள் கெய்ரோவில் ஒரு நீட்டிக்கப்பட்ட போர் நிறுத்தம் மற்றும் பணயக்கைதிகள் ஒப்பந்தத்தை எட்டுவதற்கான பேச்சுவார்த்தைகளுக்காக கூடியிருந்த நிலையில், காட்சிகள் வெளியிடப்பட்டன.

ஒக்ரோபர் 10 ஆம் திகதி படமாக்கப்பட்ட ஒரு நிமிட நீள கிளிப்பில், தெற்கு காசா நகரமான கான் யூனிஸின் அடியில் உள்ள ஒரு சுரங்கப்பாதையில் சின்வார், அவரது மனைவி போல் தோன்றிய ஒரு பெண், அவரது மூன்று குழந்தைகள், சின்வாரின் சகோதரர் இப்ராஹிமுடன் நடந்து செல்வது போல் தோன்றுகிறது.

அந்த வீடியோவில் சின்வார் ஆரோக்கியமாகத் தோன்றுகிறார். ஒரு பையை எடுத்துக் கொண்டு செல்லும் அவர், அடிடாஸ் ஃபிளிப்ஃப்ளாப்ஸ் அணிந்துள்ளார். அவரது மகள்களில் ஒருவர் பொம்மையை வைத்திருக்கிறார்.

இந்த வீடியோ ஹமாஸ் கண்காணிப்பு காட்சிகளில் இருந்து சமீபத்தில் அப்பகுதியில் செயல்படும் இஸ்ரேலிய துருப்புக்களால் மீட்டெடுக்கப்பட்ட சுரங்கப்பாதைகளில் இருந்து எடுக்கப்பட்டது.

சின்வாரின் பின்புறம் கமராவை எதிர்கொள்ளும் போது, அந்த உருவத்தின் காதுகளின் பெரிய அளவு மற்றும் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி இஸ்ரேல் இராணுவம் அவரை அடையாளம் காண முடிந்தது என்று சனல் 12 தெரிவித்துள்ளது.

ஒரு இஸ்ரேலிய அதிகாரி சனல் 12 க்கு, சின்வாரின் கூடுதல் காட்சிகள், சமீபத்தில் படமாக்கப்பட்ட கிளிப்புகள் உட்பட அதிகாரிகள் வசம் இருப்பதாக கூறினார்.

“காஸாவில் வசிக்கும் ஒவ்வொருவரும் இப்போது ஹமாஸ் தலைவர்கள் எவ்வாறு நிலத்தடியில் வாழ்கிறார்கள் என்பதையும், அவர்கள் தங்களை, தங்கள் குடும்பங்கள் மற்றும் தங்கள் பணத்தைத் தவிர வேறு எதையும் பற்றி சிந்திக்காமல் இருப்பதையும் பார்க்கலாம்” என்று இஸ்ரேல் இராணுவ செய்தித் தொடர்பாளர் டேனியல் ஹகாரி கூறினார்.

“சின்வாரை உயிருடனோ பிணமாகவோ பிடிக்கும் வரை, வேட்டை நிறுத்தப்படாது, ”என்று ஹகாரி ஒரு பத்திரிகையாளர் சந்திப்பில் காட்சிகளை வெளியிட்டார்.

இந்த மாத தொடக்கத்தில், சின்வார் உட்பட மூத்த ஹமாஸ் இராணுவத் தளபதிகளின் நெருங்கிய உறவினர்களை படையினர் தடுத்து வைத்ததாகவும் அவர் கூறினார்.

கைது செய்யப்பட்டவர்களில் ஹமாஸின் ரஃபா படையணியின் தளபதி ரஃபா சலாமேயின் தந்தை, மூத்த ஹமாஸ் தளபதியான ஹூஸ்னி ஹம்தானின் மகன் ஹகாரி ஆகியோரும் அடங்குவர்.

கான் யூனிஸின் பானி சுஹீலா பகுதியில் உள்ள கல்லறையின் கீழ் அமைந்துள்ள ஒக்ரோபர் 10 காட்சிகளில் காணப்பட்ட சுரங்கப்பாதை வலையமைப்பை இஸ்ரேலிய துருப்புக்கள் சோதனை செய்ததாக அவர் கூறினார்.

சுரங்கப்பாதைகளில் “ஹமாஸ் மூத்த அதிகாரிகளின் படுக்கையறைகள் மற்றும் கான் யூனிஸ் படைப்பிரிவின் கிழக்கு பட்டாலியனின் தளபதியின் அலுவலகம் இருந்தது, அங்கிருந்து அவர் ஒக்டோபர் 7 அன்று தாக்குதலை வழிநடத்தினார்” என்று இஸ்ரேல் இராணுவ செய்தித் தொடர்பாளர் கூறினார்.

சிறப்புப் படைகள் சுரங்கப்பாதையின் மற்றொரு பகுதியை சோதனையிட்டன, அங்கு பத்து மீற்றர் நிலத்தடியில், கண்காணிப்பு கமரா காட்சிகள் “காசா பகுதியில் உள்ள ஹமாஸ் தலைவர், தலைமை கொலையாளி யஹ்யா சின்வார், சுரங்கப்பாதை வலைப்பின்னல் வழியாக தனது குழந்தைகள் மற்றும் அவரது மனைவிகளில் ஒருவருடன் தப்பி ஓடுவதைக் காட்டுகிறது.” ஹகாரி கூறினார்.

“ஒக்ரோபர் 10 அன்று எடுக்கப்பட்ட காட்சியில், போரின் தொடக்கத்தில், அவர் தனது குடும்பத்துடன் நிலத்தடியில் அவர் முன்கூட்டியே கட்டிய பாதுகாப்பான தங்கும் வளாகங்களில் ஒன்றிற்கு தப்பிச் சென்றார்,” என்று அவர் மேலும் கூறினார். “நாங்கள் அவரைப் பிடிக்க உறுதியாக இருக்கிறோம், நாங்கள் அவரைப் பிடிப்போம்.”

“தேடல்களைத் தொடர்ந்து, மற்ற மூத்த அதிகாரிகளுடன் அவர் தங்கியிருந்த வளாகத்திற்கு வந்தோம், அவர் நிலத்தடியில் மறைந்திருந்தார், அவருக்கு மேலே போர் நடந்து கொண்டிருந்தது,” ஹகாரி கூறினார். “ஹமாஸின் மூத்த அதிகாரிகள் வசதியான சூழ்நிலையில் வளாகத்தில் வசித்து வந்தனர். அவர்களிடம் உணவு மற்றும் குளியலறைகள் உள்ளன, அதனுடன் மில்லியன் கணக்கான டொலர்கள் ரொக்கப் பணத்துடன் கூடிய பாதுகாப்புகள் உள்ளன“ என்றார். (அ)



# பாலி நகரில் புதிய கட்டுப்பாடு!

ஜகார்த்தா, பெப். 16

உலகின் சுற்றுலாப் பயணிகளை அதிகம் ஈர்க்கும் பகுதிகளில் ஒன்றான பாலிக்கு வருகை தரும் வெளிநாட்டவர்களுக்கு 10 டொலர் நுழைவு வரி விதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இந்தோனேசிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் பிரதேசத்தின் கலாசாரம் மற்றும் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

இதேவேளை கடந்த காலங்களில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் தவறான நடத்தைக்கு பாலி மக்கள் எதிர்ப்புத் தெரிவித்ததோடு, மத ஸ்தலங்களை அவமதித்த ரஷ்ய பிரஜை ஒருவரை நாடு கடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

அத்துடன் போக்குவரத்து விதிமீறல் சம்பவங்கள் அதிகளவில் இடம்பெற்று வருவதால் வெளிநாட்டவர்கள் குறித்த பகுதியில் மோட்டார் சைக்கிள்களை பயன்படுத்துவதையும் தடை செய்ய அதிகாரிகள் திட்டமிட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)




# உலகம் முழுவதிலும் செயலிழந்த பேஸ்புக்

## ஆயிரக்கணக்காக பயனர்கள் பாதிப்பு

லண்டன், பெப். 16

உலகம் முழுவதும் பேஸ்புக் நிறுவனம் பெரிய செயலிழப்பைச் சந்தித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து பேஸ்புக் பயனர்கள் எக்ஸ் தளத்தில் எழுதியுள்ளனர்.

செயலிழப்பு குறித்து டவுன்டிடெக்டரில் 2,000க்கும் மேற்பட்ட அறிக்கைகள் காணப்பட்டதுடன், சுமார் ஒரு மணி நேரத்திற்குள், இந்த எண்ணிக்கை இருமடங்காக அதிகரித்து கிட்டத்தட்ட 5,000 ஆக பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியாவில் பெரும்பாலான அறிக்கைகள் லண்டன், மான்செஸ்டர் மற்றும் லிவர்பூலில் இருந்து பதிவாகியுள்ளதுடன், அமெரிக்கா, அவுஸ்திரேலியா, இந்தியா மற்றும் தாய்லாந்திலும் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து பேஸ்புக் அல்லது அதன் தாய் நிறுவனமான மெட்டா இன்னும் அறிக்கை வெளியிடவில்லை.

கடந்த 2021ஆம் ஆண்டு ஒக்ரோபர் 4 ஆம் திகதி பேஸ்புக் அதன் துணை செயழிகளான மெசெஞ்சர், இன்ஸ்ராகிராம் மற்றும் வட்ஸ்அப் ஆகியவை ஏழு மணி நேரம் 11 நிமிடங்களுக்கு கடுமையான செயலிழப்பை சந்தித்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அமெரிக்காவை தாக்கிய பனிப்புயல்

நியூயோர்க், பெப். 16

பனிப்புயல் காரணமாக அமெரிக்காவின் வடகிழக்கு பகுதியில் மில்லியன் கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதன் காரணமாக 1,220 இற்கும் மேற்பட்ட விமானங்கள் இரத்து செய்யப்பட்டதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், பனிப்புயல் தாக்கத்தினால் நியூயோர்க் நகரிலுள்ள பாடசாலைகள் மூடப்பட்டதுடன், வாகனம் செலுத்துவதனை தவிர்க்குமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் தேவையற்ற பயணங்களை தவிர்க்குமாறும் அத்தியாவசிய தேவைகளுக்கு மாத்திரம் பொது போக்குவரத்து சேவைகளை பயன்படுத்துமாறும் அவசர அறிவிப்பு அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

அமெரிக்காவின் அதிக சனத்தொகையை கொண்ட நியூயோர்க் நகரில் கடந்த இரண்டு வருடங்களில் பனியை அகற்றுவதற்கான உபகரணங்கள் பயன்படுத்தப்பட்ட முதல் சந்தர்ப்பம் இதுவாகுமென அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதன்படி, நான்கில் இருந்து எட்டு அங்குலம் அதாவது 10 முதல் 20 சென்றி மீட்டர் வரை பனிப்பொழிவு காணப்படும் எனவும் மணித்தியாலத்திற்கு 40 மைல் வேகத்தில் காற்று வீசக் கூடுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில், சுமார் 32 மில்லியனுக்கும் அதிகமான மக்களுக்கு பனிப்புயல் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வடகிழக்கில் உள்ள பல கிராமப்புறங்களுக்கான போக்குவரத்து முற்றாக தடைப்பட்டுள்ளது. மேலும் மின்சார விநியோகம் தடைபடலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன், கிழக்கு கடற்கரையின் சில பகுதிகளில் வெள்ள அனர்த்தம் ஏற்படலாமென எதிர்பார்க்கப்படுவதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

ஈழநாடு



# 50 ஆயிரம் விவாகரத்து வழக்குகள் விசாரணை!

## நீதியமைச்சர் விஜயதாஸ தகவல்

கொழும்பு, பெப். 16

**சுமார் 50,000 விவாகரத்து வழக்குகள் நீதிமன்றங்களில் விசாரிக்கப்பட்டுள்ளன.**

கடந்த 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை 48,391 விவாகரத்து வழக்குகள் நீதிமன்றங்களில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளதாக நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே நீதியமைச்சர் இதனை தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குறித்த காலப் பகுதியில் மனைவி அல்லது குழந்தைகளுக்கான ஜீவனாம்சம் தொடர்பான 37, 514 வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளன.



இலங்கை போன்ற ஒரு சிறிய நாட்டிற்கு இது ஒரு பெரிய தொகையாக கருதப்படுவதாக அவர் மேலும் கூறினார்.

# நாட்டை விட்டு தப்பிச் சென்ற 42 பேருக்கு சிவப்பு அறிவித்தல்!

கொழும்பு, பெப். 16

பாதாள உலக மற்றும் போதைப்பொருள் கடத்தல் போன்ற குற்றச் செயல்களில் ஈடுபட்டு, நாட்டை விட்டு தப்பிச் சென்ற குற்றவாளிகளுக்கு இதுவரை 42 சர்வதேச சிவப்பு அறிவிப்புகள் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு முன்பாக புதிய பொலிஸ் நிலையத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சிவப்பு அறிவிப்புகளுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் சர்வதேச பொலிஸா



ரின் உதவியுடன் இலங்கைக்கு அழைத்து வரப்படுவார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திலிருந்து ஹரக் கட்டா தப்பிச் செல்ல முயற்சித்த சம்பவத்துக்கு உதவியதாகக் கூறப்படும் பொலிஸ் அதிகாரியும் விரைவில் இலங்கைக்கு அழைத்து வரப்படுவார் என்றும் அவர் கூறினார்.

(அ)

# ரணிலின் பாதுகாப்பு வலயங்களுக்கு எதிரான மனு விசாரணைக்கு திகதி

கொழும்பு, பெப். 16

பொதுமக்கள் போராட்ட காலத்தின் பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் கொழும்பு மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் பல பகுதிகளை அதியுயர் பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனப்படுத்தி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக அடிப்படை மனித உரிமைகள் மீறப்படுவதாகத் தீர்ப்பளிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுவை பரிசீலிக்க உயர் நீதிமன்றம் திகதி நிர்ணயித்துள்ளது.

இந்த மனு நேற்று முன்தினம் முர்து பெர்னாண்டோ, எஸ். துரைராஜா மற்றும் யசந்த கோதாகொட ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு முன்னிலையில் அழைக்கப்பட்டது.

மேலும், சம்பந்தப்பட்ட மனுவை ஒக்ரோபர் 22 ஆம் திகதி பரிசீலனைக்கு அழைக்கவும் மூன்று நீதிபதிகள் அடங்கிய அமர்வு உத்தரவிட்டது.

செப்ரெம்பர் 23, 2022 அன்று, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால், கொழும்பு மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில் உள்ள பல இடங்களை உயர் பாதுகாப்பு வலயங்களாகப் பெயரிட்டு விசேட பொதுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டார்.

ஜனாதிபதியினால் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தல் காரணமாக மக்களின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்படுவதாக தீர்ப்பளிக்குமாறு கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சட்டமா அதிபர், ஜனாதிபதியின் செயலாளர், பாதுகாப்புச் செயலாளர், பொலிஸ் மா அதிபர் உள்ளிட்டோர் இந்த மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர். (அ)

# இராணுவத்தினரின் நலனை மேம்படுத்த புதிய திட்டங்கள்

கொழும்பு, பெப். 16

இராணுவத்தில் கடமையாற்றும் அதிகாரிகள் மற்றும் இராணுவத்தினரின் நலனை மேலும் விரிவுபடுத்தும் நோக்கில், இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் விக்கும் லியனகேயின் அறிவுறுத்தலின் பேரில், சுகாதாரம் மற்றும் கல்வி ஆகிய துறைகளை உள்ளடக்கிய பல நிகழ்ச்சிகள் இராணுவ தலைமையகத்தில் இடம்பெற்றன.

அதன்போது, இராணுவ உறுப்பினர்கள், அவர்களின் நெருங்கிய உறவினர்கள், நலன்புரி அறக்கட்டளையில் உறுப்புரிமைப் பெற்றுள்ள ஓய்வு பெற்ற அதிகாரிகள், சிப்பாய்களின் திட்டமிடப்பட்ட தீவிர அறுவைச் சிகிச்சைகள் மற்றும் தீவிரமற்ற அறுவைச் சிகிச்சைகள் தொடர்பில் எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வாக 'கேஸ்லெஸ் மெடி கிளைம்' எனும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

இத்திட்டத்துடன் தொடர்புடைய சுவாசஹன காப்புறுதி நிதியத்தின் கீழ் வைத்தியசாலை கட்டணங்களை நேரடியாக செலுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடுதல் மற்றும் பரிமாற்றமானது இராணுவ தளபதி, வைத்தியசாலை பிரதிநிதிகளின் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இதன்படி, இத்திட்டத்தின் கீழ், நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள 33 தனியார் வைத்தியசாலை வலையமைப்புகளின் ஊடாக, நேற்று முதல் இராணுவ உறுப்பினர்கள் மற்றும் நலன்புரி நிதியத்தில் அங்கம் வகிக்கும் ஓய்வுபெற்ற போர்வீரர்களும் இந்த வசதிகளை பெற்றுக்கொள்ளக்கூடிய காணப்படுகிறது.

மேலும், ஆசிரி வைத்தியசாலை ஹோல்டிங்ஸ் பிஎல்சி, தேவைப்படும் வீரர்களின் குழந்தைகளுக்காக மாதாந்தம் இரண்டு இருதய அறுவை சிகிச்சைகளுக்கு நிதியுதவி வழங்குவதாக உறுதியளித்தது.

மேலும், 2022 மற்றும் 2023ஆம் ஆண்டுகளில் தரம் 5 புலமைபரிசில் பரீட்சையில் சிறந்து விளங்கிய, படையினரின் 635 பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணப் பொதிகள் வழங்கப்பட்டன.

அத்தோடு, போர்வீரர்களின் மகன்கள் மற்றும் மகள்களின் கல்வியை இலகுபடுத்தும் வகையில் பெறுமதியான 'கற்றல் நண்பன்' எனும் 300 இணைய விண்ணப்பங்களும் விநியோகிக்கப்பட்டன.

(அ)

# தோட்ட மக்களை வலுவூட்ட விசேட சமூக உடன்படிக்கை

கொழும்பு, பெப். 16

எமது நாட்டிற்கு பெரும் வளமாக காணப்படும் மலையக மற்றும் தென் பகுதி தோட்ட சமூகத்தினரின் வாழ்க்கை, வாழ்வாதாரம், ஜீவனோபாயம் உள்ளிட்ட சமூக, பொருளாதார, அரசியல் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்காக, மலையகம் மற்றும் தென் பகுதி பெருந்தோட்டத் துறையில் உள்ள சமூகத்துடன் இன்று ஒரு முக்கியமான சமூக உடன்படிக்கையை மேற்கொள்ள முடிந்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நேற்று முன் தினம் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமை அலுவலகத்தில், மலையக, தென் பகுதி பெருந்தோட்ட சமூகங்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கான உறுதிமொழியை வழங்கி, பல்வேறு தோட்ட அரசியல் கட்சிகள் மற்றும் பிரதிநிதிகளுடன், சமூக உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட வேளையில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இதனைத் தெரிவித்தார்.

இலட்சக்கணக்கான மலையக மற்றும் தென் பகுதி பெருந்தோட்ட சமூகங்கள் நாட்டின் உயிர்நாடிக்கு பங்களித்து வருவதால், அவர்களை எப்போதும் கூலித்தொழிலாளிகளாகவே வைத்திருக்காது, அவர்களுக்கு பயிர்ச்செய்கை நில உரிமை மற்றும் வீட்டுரிமைகளை வழங்குவதோடு, பெருந்தோட்டத் துறையில் பெருந்தோட்ட தொழில் முயற்சியாளர்களாக பணியாற்றும் பெரும் வாய்ப்பும் இதன் மூலம் உருவாவதாகவும், இது வரை இரண்டாம், மூன்றாம் வகுப்பினர் எனும் கவனிப்பாரற்ற நிலைக்கு தள்ளப்பட்டிருந்த இந்த சமூகத்திற்கு, வார்த்தைகளோடு மட்டுப்பட்ட கோஷங்களை கடந்து, ஒரு குறித்த காலக்கெடுவுக்கு உட்பட்ட வகையில், இந்த மக்களை வலுவூட்ட, தெளிவான சமூக இணக்கப்பாட்டை எட்டியதாக எதிர்க்கட்சித் தலைவர் இங்கு சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் அரசாங்கம் நிறுவப்பட்ட முதல் நாளிலிருந்தே, இந்த பிரச்னைகள் அனைத்தையும் கலந்துரையாடுவதற்கு பதிலாக, இந்த சமூக ஒப்பந்தத்தை நடைமுறை ரீதியாக யதார்த்தமாக்குவதற்கு தாம் நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்த அவர், இந்நாட்டின் ஜனநாயக வரலாற்றில் இது ஒரு முக்கியமான தருணம் என்று கூறலாம் எனவும், அரசியல் சூழ்ச்சிகளால் நாளுக்கு நாள் வஞ்சிக்கப்படும் மலையக மற்றும் தென்பகுதி பெருந்தோட்ட சமூகத்திற்கு, பொருளாதார மற்றும் சமூக சுதந்திரத்தை ஏற்படுத்தும் ஒரு முக்கியமான பயணத்தை மேற்கொள்வதே, ஐக்கிய மக்கள் கூட்டணியின் முதன்மையான பணி என்றும் அவர் தெரிவித்தார்.

(அ)

# மின்சார சபையின் சீர்திருத்தங்களுக்கான உதவியைத் தொடர்வதாக ஜெய்க்கா உறுதி

கொழும்பு, பெப். 16

இலங்கை மின்சார சபையின் சீர்திருத்த செயல்முறைக்கு வழங்கப்பட்ட தொடர்ச்சியான ஆதரவிற்காக ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்திற்கு மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தனது நன்றியைத் தெரிவித்துள்ளார்.

நேற்று மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சில் நடைபெற்ற ஜெய்க்கா தலைவர் தனகா அகிஹிகோ மற்றும் நிறுவனத்தின் சிரேஷ்ட அதிகாரிகளுடனான சந்திப்பின் போது தாம் நன்றி தெரிவித்ததாக அமைச்சர் எக்ஸ் பதிவில் தெரிவித்துள்ளார்.

"ஜெய்க்கா மின்சாரத் துறையின் முக்கிய உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கும், மானியங்கள், சலுகை நிதி வசதிகள் மற்றும் தொழில்நுட்ப உதவிகளுடன் ஆற்றல் சக்தி திட்டங்களுக்கும் உதவியுள்ளது. தற்போது, சீர்திருத்த செயலகத்தை அமைப்பதற்கும், சீர்திருத்தங்களைச் செயற்படுத்த வல்லுனர்களை செயலகத்திற்கு விரிவுப



டுத்துவதற்கும் நிதி மற்றும் தொழில்நுட்ப உதவியுடன் சீர்திருத்த செயல்முறைக்கு ஜெய்க்கா தீவிரமாக உதவி வருகிறது,"

ஜெய்க்கா தலைவர் மற்றும் பிரதிநிதிகளின் உதவிக்கு நன்றி தெரிவிப்பதாகவும், சீர்திருத்தங்கள், எரிசக்தி திறன் திட்டங்கள், உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தியை ஒருங்கிணைத்தல் போன்றவற்றுக்கு தொடர்ந்து உதவிகளை கோரியதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

(அ)

## ஹெகலிய...

இறக்குமதி செய்த குற்றச்சாட்டில் முன்னாள் அமைச்சர் கெஹலிய, அவரின் செயலர் உள்ளிட்ட 7 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நிகழ்நிலை...

மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சமூக வலைதளங்களைக் கண்காணித்து ஒழுங்குபடுத்துவதற்காக 2017 இல் இருந்த அரசாங்கம் நிகழ்நிலை பாதுகாப்பு சட்டத்தை கொண்டுவர அன்று நடவடிக்கை எடுத்துவந்தது. குறித்த சட்டம் தொடர்பாக அனைத்துத் தரப்பினரின் கருத்துக்களை கேட்டறிந்து இதற்குத் தேவையான திருத்தங்களை மேற்கொண்டு அதனைப் பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கும் பொறுப்பு அன்று ஊடக அமைச்சுக்கு வழங்கப்பட்டிருந்தது.

பின்னர் சமூகவலைத்தளங்களின் தலைமையகத்துடனும் இது தொடர்பாகக் கலந்துரையாட சிங்கப்பூருக்கும் எமது தரப்பினர் சென்றிருந்ததுடன் அவர்களும் இங்குவந்து இது தொடர்பாக கலந்துரையாடியபோது, சட்ட ரீதியில் கட்டுப்பாடுகளை விதிக்காமல் சுய கட்டுப்பாட்டுக்குச் செல்வதற்கு அப்போது இரு தரப்பினரும் இணக்கப்பாட்டுக்கு வந்ததால், 2023வரை அதன் பிரகாரமே செயற்பட்டு வந்தது.

என்றாலும் சமூகவலைதளங்களைப் பயன்படுத்திக்கொண்டு மேற்கொள்ளப்பட்ட குற்றச்செயல்கள் தொடர்பாக 2023 வரை 5ஆயிரத்துக்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் பொலிஸ் கணினி குற்றப்பிரிவுக்குக் கிடைக்கப்பெற்றிருந்தன. அதனைக் கருத்தில்கொண்டே பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு இந்த நிகழ்நிலை காப்புச் சட்டத்தை கொண்டுவர நடவடிக்கை எடுத்தது, பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்திருந்தது. இலங்கை வரலாற்றில் இந்த சட்டமூலத்துக்கு எதிராகவே உயர் நீதிமன்றத்தில் சுமார் 45க்கும் மேற்பட்ட மேன்முறையீடுகள் செய்யப்பட்டிருந்தன.

இதன் பிரகாரம் குறித்த சட்டமூலம் தொடர்பாக உயர்நீதிமன்றத்தின் பரிந்துரைகள் மற்றும் நிலைப்பாடுகளை உள்ளடக்கிய சட்டமூலம் தயாரிக்கப்பட்டபோதும் சில திருத்தங்களை சட்டப்பிரச்னை காரணமாக பாராளுமன்றத்தின் குழுநிலையின்போதும் எடுத்துக்கொள்ள முடியவில்லை.

என்றாலும் அந்தத் திருத்தங்கள் அனைத்தையும் கடந்த வாரம் பொது மகனள் பாதுகாப்பு அமைச்சரால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது, அதற்கு அமைச்சரவையும் அனுமதி வழங்கி இருந்தது. தற்போது அது சட்ட வரைவு திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

அங்கு சட்டமூலம் தயாரிக்கப்பட்ட பின்னர் அது சட்டமா அதிபருக்கு அனுப்பப்படும். அவர் குறித்த சட்டமூலம் அரசமைப்புக்கு உட்பட்டதா என்ற சான்றிதழை வழங்கிய பின்னர் அமைச்சரவை மீண்டும் அதனை அனுமதிக்க வேண்டும். அமைச்சரவை அனுமதித்த பின்னர் எந்த வேளையும் வர்த்தமானியில் பிரசுரிக்க முடியும். வர்த்தமானி வெளியிடப்பட்டு 7 தினங்களுக்கு பின்னர் எந்த வேளையும் அதனை பாராளுமன்றத்துக்கு முதலாம் வாசிப் புக்கு சமர்ப்பிக்க முடியும். அவ்வாறு பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்து 2 வாரங்களுக்குள் அதுதொடர்பில் உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யலாம்.

எனவே, இவ்வாறான சட்டங்களை கொண்டுவரும்போது பாதிக்கப்பட்டவர்களை பாதுகாக்கும் வகையிலும் பொது மக்களுக்கு அநீதி ஏற்படாத வகையிலுமே இதனை மேற்கொள்ள வேண்டி இருக்கிறது. சமூகவலைதளங்களை துஷ்பிரயோகம் செய்வதை தடுப்பதே இந்த சட்டத்தின் நோக்கமாகும். அதனால் நிகழ்நிலை காப்புச் சட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய திருத்தங்களுடன் மீண்டும் விரைவில் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும் - என்றார்.

## கட்சிக்காக...

கூறியிருக்கிறார் ஜனாதிபதி சட்டத்தரணியும் பாராளுமன்ற உறுப்பினருமான எம். ஏ. சுமந்திரன்.

மேலும், "இந்த வழக்குகள், கட்டாணைகள் குறித்து இன்று (நேற்று) காலையிலேயே கொழும்பில் கேள்விப்பட்டேன். திருகோணமலை வழக்கில் என் பெயரும் எதிராளியாகக் குறிப்பிடப்பட்டுள்ளதாக அறிந்துள்ளேன். ஏனைய எதிராளிகளான எமது கட்சியின் சகாக் கள் கேட்டுக்கொண்டால் அவர்களுக் காக வும் இந்த வழக்கில் முன்னிலையாகி கட்சிக்காக வாதாடுவேன்." - என்றார். (ஐ)

## தர்மமே...

தலைவர் தெரிவு மற்றும் நிர்வாகிகள் தெரிவு, தேசிய மாநாடு நடத்துவதற்கு இடைக்கால தடையை திருகோணமலை, யாழ்ப்பாணம் நீதிமன்றங்கள் நேற்று விதித்தன.

இந்த நிலையிலேயே, நேற்று பிற்பகல் கட்சியின் புதிய தலைவரான சி. சிறீதரன் "தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும் மீண்டும் தர்மமே வெல்லும்.", என்று பேஸ்புக்கில் பதிவிட்டுள்ளார். (ஐ)

## தலைமன்னார்...

மாத்திரமின்றி - தொடர்புகள் ஊடாகவும் இங்கு ஏற்பட்டுள்ள அபிவிருத்திகளை பார்க்க முடிகிறது.

தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்துக்கும் இடையில் இருக்கின்ற தொடர்புகளை எவ் வாறு பயன்படுத்த முடியும் என்பதை ஆராய்ந்து வருகிறோம்.

அதற்கு தேவையான விடயங்களை முன்னெடுத்து வருகிறோம். குறிப்பாக மீனவர் சமூகத்துக்கு தேவையான உள் கட்டமைப்பு, தொழில்நுட்பம் மற்றும் இந்தியாவில் இருந்து கொண்டு வர வேண்டியவை தொடர்பாகவும் ஆராய்ந்து வருகிறோம் - என்றார். (ஐ)

## 13இன்...

வருமாறு,

13ஆவது அரசமைப்பு திருத்தத்தின் மூலம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள மிகவும் ஆபத்தான அதிகாரங்கள் பொலிஸ் அதிகாரங்களாகும். எனவே, மாகாண சபைகளில் இருந்து பொலிஸ் அதிகாரங்கள் அகற்றப்பட வேண்டும் என்பது தேசியவாதிகளின் 37 வருட கால கனவாக இருந்து வருகின்றது. இந்த கனவை நனவாக்கும் வகையில் வரலாற்றில் முதல் தடவை யாக 22 ஆவது அரசமைப்பு திருத்தம் என்ற சட்டமூலத்தை முன்வைத்து, மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்களை நீக்கியுள்ளோம்.

பெப்ரவரி 13 ஆம் திகதி (கடந்த செவ்வாய்க்கிழமை) இந்த வரைவு பிரேரணை வர்த்தமானியில் வெளியி டப்பட்டுள்ளது. எதிர்வரும் 20ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள பாராளுமன்ற கூட்டத்தொடரில் இதனை முன்வைக்கும் சந்தர்ப்பம் எமக்குக் கிடைத்துள்ளது.

நீதிமன்றத்தின் முன் வரைவின் அரசமைப்புத் தன்மையை சவால் செய்ய எவருக்கும் சமர்ப்பிக்கப்பட்ட நாளிலிருந்து 15 நாட்கள் உள்ளன. இதனை எதிர்த்து தமிழ் பிரிவினைவாதிகள் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரு வார்கள்.

மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரம் அவசியமில்லை என்பது நாட்டு மக்களின் நீண்டகால கோரிக் கையாக இருக்கிறது. தமிழ் பிரிவினை வாதிகள் மாத்திரமே அதை விரும்புவ தில்லை.

நாட்டில் இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே யுத்தம் இடம்பெற்றது. இனியொரு யுத்தம் இடம்பெறுவதாயின் இராணு வத்துக்கும் வடக்கிலுள்ள பொலிஸாருக்கும் இடையில் இடம்பெறும். ஆதலால் இந்தத் திருத்தம் நிறை வேற்றப்பட வேண்டும். அதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியமா கும். நாட்டை நேசிப்பவர்கள் யார், நாட்டுக்கு எதிரானவர்கள் யார் என்பதை மக்கள் அறிந்துகொள்ள முடியும் - என்றார். (ஐ)

# பாதுகாப்பான கடவை அமைக்குமாறு இணுவிலில் மக்கள் போராட்டம்!

யாழ்ப்பாணம், பெப். 16

இணுவிலில் பாதுகாப்பான புகையிரதக் கடவை அமைக்குமாறு வலியுறுத்தி அப்பகுதி மக்கள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று முன்தினம் ரயில் விபத்து இடம்பெற்ற இடத்திலேயே இந்தப் போராட்டம் நடைபெற்றது. ரயில் விபத்தில் அதே இடத்தை சேர்ந்த இருவர் உயிரிழந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், "இறந்த உயிரே இறுதியாகட்டும்", "எங்கள் உயிரைக் காவு கொள்ளாதே", தினம் தினம் பயந்த பயணமா? ஆகிய கோஷங்களை பதாகைகளி எழுதியிருந்தனர் அத்துடன் அது தொடர்பான கோஷங்களையும் எழுப்பினர்.

போராட்டத்தின்போது, காங்கேசன்துறை நோக்கி சென்ற ரயிலையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

(அ)

# தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டதும் பெரமுன வேட்பாளரை கூறுவோம்!

## நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

கொழும்பு, பெப். 16

தேர்தல் திகதி உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டதன் பின்னர் பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் யார் என்பதை நாம் அறிவிப்போம் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அரசியலமைப்பின் பிரகாரம் இந்த வருட இறுதிக்குள் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

தேர்தல் ஒன்று நடத்தப்படும் பட்சத்தில் கட்சி என்ற ரீதியில் அதற்கு தயாராக வேண்டும். ஆனால் ஒரு சிலர் தேர்தல் நடத்தப்படுவதை விரும்பவில்லை.

பொதுஜன பெரமுன கட்சியின் சார்பில் நாம் ஒரு வேட்பாளரை முன்னிலைப்படுத்துவோம். கட்சி என்ற என்ற ரீதியில் நாம் தேர்தலுக்கு தயாராகவே உள்ளோம்.

வேட்பாளரை தெரிவு செய்வது மற்றும் கூட்டணி அமைப்பது தொடர்பாகவும் நாம் கலந்துரையாடல்களை முன்னெடுத்து வருகின்றோம்.

தேர்தல் திகதி உத்தியோகப்பூர்வமாக அறிவிக்கப்பட்டதன் பின்னர் பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் யார் என்பதை நாம் அறிவிப்போம்.

தற்போதைய சூழ்நிலையில் நாட்டு மக்கள் எதிர்நோக்கியுள்ள சவால்கள் மற்றும் நெருக்கடிகளுக்கு அரசாங்கம் என்ற ரீதியில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலேயே ஆராய வேண்டும்" - என்றார்.

(அ)

## அஸ்வெசும...

இரண்டாம் கட்டத்துக்கு விண்ணப்பிக்க வாய்ப்புள்ளது.

அஸ்வெசும இரண்டாம் கட்டத்துக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வது தொடர்பாக விளக்கமளிக்கும் செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அஸ்வெசும இரண்டாம் கட்டத்தின் கீழ் 24 இலட்சம் குடும்பங்களுக்கு நன்மைகள் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. முடிந்தவரை உண்மையான மற்றும் துல்லியமான தகவல்களுடன் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதன் மூலம் நன்மைகளை வழங்கும் செயல்முறையை துரிதப்படுத்த முடியும் என்று குறிப்பிட்ட அவர், விண்ணப் பிக்கையில் கட்டாயம் அடையாள அட்டை எண்ணை குறிப்பிட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

தேசிய அடையாள அட்டைகள் இல்லாத விண்ணப்பதாரர்களுக்கு உடனடியாக அடையாள அட்டைகளை வழங்கும் விசேட வேலைத்திட்டம், ஆட்பதிவுத் திணைக்களத்தால் பிரதேச செயலக மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

அஸ்வெசுமவின் இரண்டாம் கட்டத்திற்கான விண்ணப்பத்தை ஒன்லைன் முறையிலும் கிராம உத்தியோகத்தர் அல்லது பிரதேச செயலகத்தின் ஊடாகவும் பெற்றுக் கொள்ள முடியும் மற்றும் www.wbb.gov.lk என்ற இணையத்தளத்தின் ஊடாக தமிழ் அல்லது சிங்களம், ஆங்கிலத்தில் விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்ய முடியும்.

இணையத்தின் ஊடாக விண்ணப்பிக்க முடியாதவர்களுக்கான மாதிரி விண்ணப்பங்கள் பிரதேச செயலகங்கள் அல்லது சிவில் அமைப்புகளின் ஊடாக பெற்றுக்கொள்ளலாம். இதற்கான விண்ணப்பப்படிவங்களை எந்தக் காரணம் கொண்டும் பணம் செலுத்தி வாங்க வேண்டிய அவசியம் கிடை யாது.

முதல்கட்டமாக விண்ணப்பித்து அஸ்வெசும நன்மைகளைப் பெறத் தகுதி பெறாதவர்களும், மேல்முறை யீட்டு விசாரணையில் பங்கேற்காதவர் களும் தங்களின் தகவல்களை மீள் சான்றுபடுத்த வாய்ப்பு வழங்கப்படும் அஸ்வெசும தொடர்பான மேலதிக தகவல்களை, 1924 எனும் அவசர எண்ணின் ஊடாக பெற்றுக் கொள்ளலாம் - என்றும் கூறினார். (ஐ)

## யாழ்ப்பாணம்...

அதிக எண்ணிக்கையான உறுப்பினர்கள் பொதுக் குழுக் கூட்டங்களில் பங்குபற்றி இந்தத் தெரிவுகளின்போது வாக்களித்துள்ளமையால் குறித்த கூட்டம் சட்ட முரணானது - என்று சமர்ப்பணங்களை வைத்தனர்.

இதன் அடிப்படையில், எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெறவிருந்த கட்சியின் தேசிய மாநாட்டுக்கு திருகோணமலை மாவட்ட நீதிமன்றம் 14 நாட்களுக்கு இடைக்காலத் தடை உத்தரவு விதித்தது. அத்தோடு முன்னைய பொதுக் குழுக் கூட்டங்கள் இரண்டிலும் எடுக்கப்பட்ட முடிவுகள், தீர்மானங்கள் போன்றவற்றுக்கும் இதே தடைக் கட்டாணை வழங்கப்பட்டது.

**யாழ்ப்பாணம் நீதிமன்றில்...**

இதேபோன்று, இலங்கை தமிழ் அரசு கட்சியின் தேசிய மாநாட்டுக்கு தடைகோரி யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில் அந்தக் கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட உறுப்பினர் பீற்றர் இளஞ்செழியன் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

அவரின் சார்பில், சட்டத்தரணி குமாரவடிவேல் குருபரன் முற்பட்டு வாதாடினார்.

இந்த வழக்கிலும் கட்சியின் தேசிய மாநாட்டை நடத்துவதற்கு யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த வழக்குகளில் மாவை சேனாதிராஜா, சேவியர் குலநாயகம், ப.சத்தியலிங்கம், சி.சிறீதரன், க.குகதாசன், எம். ஏ. சுமந்திரன், சண்முகம் குகதாசன், ப. சத்தியலிங்கம், சீ. யோகேஸ்வரன் ஆகியோர் எதிர் மனுதாரர்களாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

# ஆப்கானுக்கு எதிரான தொடர் முழுமையாக இலங்கை வசம்!

கண்டி, பெப். 16

ஆப்கானிஸ்தானுக்கு எதிராக 3ஆவதும் கடைசியுமான ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 7 விக்கெட்களால் இலங்கை அமோக வெற்றியீட்டியது. இதன் மூலம், 3 - 0 என்ற கணக்கில் தொடரை இலங்கை முழுமையாக தன் வசமாக்கியது.

இலங்கை வந்துள்ள ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிரான மூன்றாவது போட்டி நேற்று முன்தினம் கண்டி - பல்லேகலையில் நடந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் அணி 267 ஓட்டங்களை இலக்காக இலங்கை அணிக்கு நிர்ணயித்தது.

இலக்கை துரத்திய இலங்கை அணிக்கு பதும் நிஷங்க - அவிஷ்க பெர்னாண்டோ அபார தொடக்கத்தை ஏற்படுத்தினர். இருவரும் 173 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்தனர்.

அவிஷ்க பெர்னாண்டோ 91 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது ஆட்டமிழந்தார். அவர் 66 பந்துகளில் 10 பௌண்ட்ரிகள், 5 சிக்ஸர்களை விளாசினார்.

பதும் நிஷங்கவுடன் இணைந்த குஷல் மெண்டிஸ் அபாரமாக ஆடினார். இந்த நிலையில், பதும் நிஷங்க 101 பந்துகளில் 16 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 118 ஓட்டங்களை குவித்து ஆட்டமிழந்தார்.

குஷல் மெண்டிஸ் 29 பந்துகளில் 40 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழந்தார். தொடர்ந்து சதீர சமரவிக்ரம 8 ஓட்டங்களுடனும் சரித் அசலங்க 7 ஓட்டங்களுடனும் ஆட்டம் இழக்காமல் 267 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை எட்ட உதவினர்.




முன்னதாக துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் 48.2 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 266 ஓட்டங்களைப் பெற்றது.

ரஹ்மத்துல்லா குர்பாஸ், ரஹ்மத் ஷா, அஸமத்துல்லா ஓமர்ஸாய் ஆகியோரின் திறமையான துடுப்பாட்ட உதவியுடன் ஆப்கானிஸ்தான் 40ஆவது ஓவரில் 4 விக்கெட்களை இழந்து 243 ஓட்டங்களைப் பெற்று வலுவான நிலையில் இருந்தது.

ஆனால், ஆப்கானிஸ்தான் அதன் பின்னர் மோசமாகத் துடுப்பெடுத்தாடி கடைசி 6 விக்கெட்களை வெறும் 43 ஓட்டங்களுக்கு இழந்தது.

ஆப்கானிஸ்தான் அணியின் ரஹ்மனுல்லா குர்பாஸ் 48, ரஹ்மத் ஷா 65, அஸ்மதுல்லா ஓமர்ஷாய் 54 ஓட்டங்களை குவித்தனர்.

இலங்கையின் பந்துவீச்சில் பிரமோத் மதுஷன் 3 விக்கெட்களையும் அசித பெர்னாண்டோ, துனித் வெல்லாலகே, அகில தனஞ்சய தலா 2 விக்கெட்களை கைப்பற்றினர். (ஐ)

---

இருபது - 20 உலகக் கிண்ணம்

## ரோஹித் தலைமையிலேயே இந்திய அணி களமிறங்கும்!

ராஜ்கோட், பெப். 16




மும்பை இருபது - 20 கிரிக்கெட் உலகக் கிண்ணத் தொடரில் இந்திய கிரிக்கெட் அணியை ரோஹித் சர்மா வழி நடத்துவார் என இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் (பி. சி. சி. ஐ. ) செயலாளர் ஜெய் ஷா தெரி வித்துள்ளார்.

ராஜ்கோட்டில் நடைபெற்ற நிகழ்வில் அவர் இதனை தெரிவித்தார்.

கடந்த 2022ஆம் ஆண்டு நடைபெற்ற இருபது - 20 உலகக் கிண்ணத் தொடருக்கு பிறகு மூன்றே மூன்று சர்வதேச இருபது - 20 போட்டிகளில் மட்டுமே ரோஹித் சர்மா விளையாடி உள்ளார். அவருக்கு பதிலாக இந்திய இருபது - 20 அணியை ஹர்திக் பாண்ட்யா வழிநடத்தி வந்தார். அவர் விளையாடாத நேரங்களில் அணியை மாற்று வீரர்கள் வழிநடத்தினர்.

இந்நிலையில், அடுத்த சில மாதங்களில் நடைபெற உள்ள இருபது - 20 உலகக் கிண்ணத் தொடரில் ரோஹித் பங்கேற்பாரா என்பது குறித்த விவாதம் எழுந்தது.

இந்த நிலையிலேயே, ஜெய் ஷா இந்திய அணியை இருபது - 20 உலகக் கிண்ணத்தில் ரோஹித் சர்மா வழிநடத்துவார் என்று அறிவித்துள்ளார். (ஐ)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
26
-
10
-
1929



மறைவு
18
-
01
-
2024

### திருமதி ஈஸ்வரபாதம் வசந்தரூபா

கடந்த 18.01.2024 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்ப குலவிளக்கின் அந்தியேட்டிக் கிரியை நேற்று (15.02.2024) வியாழக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. நாளை (17.02.2024) சனிக்கிழமை எமது இல்லத்தில் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இடம்பெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

மேலும் அன்னாரின் மறைவுச் செய்தியறிந்து பல வழிகளிலும் உதவிபுரிந்த அன்பு நெஞ்சங்களுக்கும், தொலைபேசி ஊடாகவும், சமூக வலைத்தளங்களினூடாகவும் அனுதாபம் தெரிவித்த அன்பு நெஞ்சங்களுக்கும். பதாகைகள், துண்டுப்பிரசுரங்கள், வெளியிட்டவர்களுக்கும். மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், வீட்டிற்கு வருகை தந்து ஆறுதல் கூறிய அன்பு நெஞ்சங்களுக்கும், யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகின்ற பொழுதெல்லாம் வைத்திய சிகிச்சைகளையும் பராமரிப்பினையும் வழங்கிய யாழ். போதனா மருத்துவமனை பணிப்பாளர், மருத்துவர்கள், தாதியர்கள், ஊழியர்கள். இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தொடர்புகளுக்கு:
**0714115002, 0714115000**
105, இராஜ வீதி, கோப்பாய்,
யாழ்ப்பாணம்.

**ஈஸ்வரபாதம் குடும்பத்தினர்.**
**ஈ.சரவணபவன் (மகன்)**
நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் (2010-2020)
உதயன் குழுமத் தலைவர்

---

## இங்கிலாந்துடனான டெஸ்ட்; இந்தியா வலுவான ஆரம்பம்!

ராஜ்கோட், பெப். 16

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் ரோஹித் சர்மா, ஜடேஜா ஆகியோரின் சதங்களின் உதவியால் இந்திய அணி முதல் நாளில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 326 ஓட்டங்களை குவித்துள்ளது.

ராஜ்கோட்டில் நடைபெற்று வரும் இங்கிலாந்துக்கு எதிரான 3ஆவது டெஸ்ட் போட்டி நேற்று ஆரம்பமானது. இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. முன்னதாகக் களமிற்கிய ஜெய்ஷ்வால், ஷுப்மன் கில், ரஜத் படிதார் ஆகியோர் விரைவாக விக்கெட்களை இழந்தனர். இத னால் 33 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களை இழந்து தடுமாறியது இந்திய அணி.

இதன்பின் ரோஹித் சர்மாவும் ரவீந்திர ஜடேஜாவும் கூட்டணி அமைத்தனர். இங்கிலாந்து பந்து வீச்சை சுலபமாக சமாளித்த இந்த இருவரும் ஓட்டங்களை குவித்தனர். பௌண்ட்ரிகளையும், சிக்ஸர்களையும் விளாசிய ரோஹித் சர்மா 71 பந்துகளில் அரைச்சதம் கடந்தார். மறுபக்கம் ஜடேஜா 90 பந்துகளை சந்தித்து அரைச்சதம் கடந்தார். தொடர்ந்து இருவரும் இணைப்பாட்டம் மூலம் 150இற்கும் அதிகமான ஓட்டங்கள் சேர்த்து நிலையான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

போட்டியின் 53ஆவது ஓவரில் ரோஹித் சர்மா சதத்தை பதிவு செய் தார். 157 பந்துகளில் 2 சிக்ஸர், 11 பௌண்ட்ரிகளுடன் 101 ஓட்டங்களை குவித்திருந்தார். கடந்த 8 இன்னிங்சில் 40 ஓட்டங்களைக்கூட தொடவில்லை. இத னால், ரோஹித் மீது விமர்சனங்கள் எழுந்தன. இந்தநிலையில்தான் ரோஹித் 12ஆவது டெஸ்ட் சதத்தை எட்டியுள்ளார்.

131 ஓட்டங்களை 196 பந்து களில் எடுத்திருந்தபோது ரோஹித் சர்மா மார்க் வூட்டின் பந்தில் ஆட்டமிழந்தார்.



மறுமுனையில் சிறப்பாக ஆடிய ரவீந்திர ஜடேஜாவுடன் சர்பராஸ் கான் இணைந்தார். அறிமுக வீரரான அவர் ஜடேஜாவுடன் இணைந்து சிறப்பாகஆடி அரைச் சதம் கடந்தார்.

அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஜடேஜா சதம் அடித்தார். அவர் 198 பந்துகளில் 7 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 100 ஓட்டங்களைப் பெற்றனர். இந்த நிலையில், சர்பராஸ் கான் 62 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

ஜடேஜா 110 ஓட்டங்களுட னும்குல்தீப் யாதவ் ஓர் ஓட்டத்துடனும் ஆட்டமிழக்காமல் இருந்த நிலையில், முதல் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தது. அப்போது இந்திய அணி 5விக்கெட்கள் இழப்புக்கு 326ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இங்கிலாந்தின் பந்துவீச்சில் மார்க் வூட் 3 விக்கெட்களையும் ரொம் ஹார்ட்லி ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 16.02.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# மோடிக்கு முக்கியத்துவம் தரும் ஐக்கிய அரபு அமீரகம்: இந்துத்துவ முகம் குறுக்கிடாமல் இருப்பது எப்படி?

**ரஜ்னிஷ் குமார்**

இந்திய பிரதமர் நரேந்திர மோடி அயோத்தியில் ராமர் கோவிலை திறந்து வைத்து ஒரு மாதம் கூட முடியாத நிலையில், நேற்று முன்தினம் அபுதாபியில் கட்டப்பட்டுள்ள முதல் இந்து கோவிலை திறந்து வைத்துள்ளார்.

ஐக்கிய அரபு அமீரகத்தில் 27 ஏக்கரில் கட்டப்பட்டுள்ள இந்த கோவிலுக்கான நிலம், அந்நாட்டு அதிபர் ஷேக் முகமத் பின் சயீத் அல் நஹ்யானால் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் மக்களவை தேர்தல் நடைபெற சில நாட்களே உள்ள நிலையில், இந்த கோவில் திறப்பு விழா பிரதமர் நரேந்திர மோடிக்கு முக்கியமான நிகழ்வாக பார்க்கப்படுகிறது.

இது இந்திய பிரதமராகி ஐக்கிய அரபு அமீரகத்திற்கு அவர் செல்லும் 7வது பயணமாகும். இங்கு முதல் பயணமாக ஆகஸ்ட் 16, 2015 அன்று வந்திருந்தார் மோடி.

1981ஆம் ஆண்டு ஐக்கிய அரபு அமீரகத்திற்கு சென்ற முன்னாள் பிரதமர் இந்திரா காந்திக்கு பிறகு, 43 ஆண்டுகள் எந்த இந்தியா பிரதமரும் இங்கு செல்லவில்லை. அதற்கு பின் நரேந்திர மோடிதான் இங்கு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த பயணத்தில், நரேந்திர மோடி ஐக்கிய அரபு அமீரக அதிபரோடு இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தி உள்ளார். அதில் சமீபகாலத்தில் இரு நாடுகளுக்கிடையே அதிகரித்து வரும் மூலோபாய மற்றும் பொருளாதார கூட்டணி குறித்து விவாதிக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

செவ்வாய்க்கிழமையன்று, இந்திய வம்சாவளியை சேர்ந்த அறுபதாயிரத்திற்கும் அதிகமான மக்கள் முன் உரையாற்றியுள்ளார் பிரதமர் மோடி.

### மோடியின் உத்தி

இதனை தொடர்ந்து துபாயில் நடைபெறும் உலக அரசாங்க உச்சி மாநாடு 2024 இல் கலந்து கொண்டுள்ளார்.

இந்தியாவை தவிர துருக்கி, கட்டார் ஆகிய நாடுகளும் இந்த மாநாட்டுக்கு அழைக்கப்பட்டுள்ளன. அபுமுரீகாவில் கட்டப்பட்டுள்ள இந்து கோவிலை பிரதமர் மோடி திறந்து வைத்துள்ளார்.

ப்ளூம்பெர்க் அறிக்கையின்படி, ஐக்கிய அரபு அமீரகம் இந்தியாவில் 50 பில்லியன் டாலர் முதலீட்டை அறிவிக்கும் என்று தகவல் வெளியாகியுள்ளது.



கடந்த மாதம், குஜராத் வந்த ஐக்கிய அரபு அமீரகத்தின் அதிபர் , பிரதமர் மோடியுடன் பேரணியில் கலந்து கொண்டார். இந்நிலையில் மோடியின் இந்த பயணம் மதம், அரசியல் மற்றும் முதலீடு என அனைத்து நோக்கங்களையும் உள்ளடக்கியது என்று கூறப்படுகிறது.

இதுகுறித்து தி இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழுக்கு பேட்டியளித்துள்ள இந்தியாவுக்கான ஐக்கிய அரபு அமீரக தூதர் அப்துல்நாசர் அல்ஷாலி, “பிரதமர் மோடியின் இந்த பயணம் சகிப்புத்தன்மை மற்றும் அனைத்தையும் ஏற்றுக்கொள்ளும் தன்மைகளுடன் தொடர்புடையதாக ஐக்கிய அரபு அமீரகம் கருதுகிறது. இந்த விழுமியங்களே நமது இருதரப்பு உறவுகளுக்கு வழிகாட்டுகின்றன” என்று தெரிவித்துள்ளார்.

ஐக்கிய அரபு அமீரகத்தின் மதம் இஸ்லாம். மறுபக்கம் நரேந்திர மோடியின் ஆட்சியின் கீழ் இந்திய இஸ்லாமியர்கள் நடத்தப்படும் விதம் குறித்தான கேள்விகளும் எழுப்பபப்பட்டு வருகிறது.

இருப்பினும், இவை அனைத்தையும் கடந்து சமீப காலமாகவே இந்தியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் இடையிலான உறவு ஆழமாகி வருகிறது.

புவிசார் அரசியல் ரீதியாக இந்தியாவுக்கு அதிகரிக்கும் முக்கியத்துவம், அதன் வேகமான பொருளாதார வளர்ச்சி ஆகிய காரணங்களினாலேயே ஐக்கிய அரபு அமீரகம் இந்தியாவிற்கு அதிக முக்கியத்துவம் அளிப்பதாக கூறப்படுகிறது.

ஐக்கிய அரபு அமீரக அதிபர் ஷேக் முகமத் பின் சயீத் அல் நஹ்யானை தனது சகோதரர் என்று அழைத்துள்ளார் பிரதமர் மோடி. ஐக்கிய அரபு அமீரகம் 2019ஆம்





ஆண்டு, தங்கள் நாட்டின் உயரிய “ஆர்டர் ஆஃப் சயீத்” விருதை நரேந்திர மோடிக்கு வழங்கி சிறப்பித்தது.

பிரதமர் மோடி திறந்து வைத்த கோவிலின் தலைமை பூசாரியான பிரம்ம விஹாரிதாஸ் சுவாமி, “இரு நாடுகளுக்கு இடையிலான உறவு இதற்கு முன்பு இவ்வளவு உறுதியானதாக இருந்ததில்லை” என்று கூறியுள்ளார்.

### மோடியின் அரசியல் பின்புலம்

இந்தியா - ஐக்கிய அரபு அமீரகம் இரு நாட்டு உறவில் மோடியின் இந்துத்துவ முகம் குறுக்கிடாமல் இருப்பது எப்படி?

இந்த கேள்வியை சவுதி அரேபியா உள்ளிட்ட பல்வேறு வளைகுடா நாடுகளுக்கு இந்தியாவின் தூதராக இருந்த தல்மீஸ் அகமதுவிடம் கேட்டோம்.

இதற்கு பதிலளித்த அவர், “ஐக்கிய அரபு அமீரகத்தை பொருத்தவரை பூர்வீக மக்களின் எண்ணிக்கை 10 முதல் 12 சதவீதம் தான். மீதமுள்ளவர்கள் புலம்பெயர்ந்து இங்கு வந்தவர்கள். இதுபோன்ற சூழலில் அந்த மக்களிடம் இருந்து எந்த அழுத்தமும் அரசுக்கு வருவதில்லை” என்கிறார்.

மேலும் பேசிய அஹ்மத், “இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைகளில் பெரும்பான்மை மக்களின் உணர்வுகள் பயன்படுத்திக் கொள்ளப்படுகிறது. அதுவும் தற்போது அந்தப் போக்கு நிறையவே அதிகரித்துள்ளது. ஆனால் ஐக்கிய அரபு அமீரகத்தில் அத்தகைய நிர்ப்பந்தம் எதுவும் இல்லை. காரணம் அங்கு முடியாட்சி அமைப்பு





உள்ளது. அது வெளியுறவுக் கொள்கையில் அதன் நலன்களை மட்டுமே முதன்மையாக வைத்திருக்கிறது. எனவே இந்தியாவின் உள்நாட்டு அரசியலில் நடப்பவைக்கும் அதற்கும் எந்த தொடர்பும் இல்லை.” என்று கூறுகிறார்.

பூர்வீக மக்கள் மற்றும் புலம் பெயர்ந்தவர்களை சேர்த்து ஐக்கிய அரபு அமீரகத்தின் தற்போதைய மக்கள் தொகை கிட்டத்தட்ட 1 கோடியாகும். இந்த எண்ணிக்கையில் வெறும் 10 லட்சம் பேர் மட்டுமே அந்நாட்டின் குடிமக்கள்.

மீதமுள்ளவர்கள் 200 நாடுகளில் இருந்து இங்கு வந்து குடியேறியவர்கள். அதில் அதிகமானோர் இந்தியாவை சேர்ந்தவர்கள். கிட்டத்தட்ட 35 லட்சம் இந்தியர்கள் அங்கு வாழ்கின்றனர். ஐக்கிய அரபு அமீரகத்தின் மக்கள் தொகையில் மூன்றில் ஒருவர் இந்தியர் ஆவர்.

### ஐக்கிய அரபு அமீரகத்துக்கு ஏன் இந்தியாவை பிடிக்கிறது?

இதுகுறித்து பேசிய தல்மீஸ் அகமது. “இந்திரா காந்தி 1981ஆம் ஆண்டு ஐக்கிய அரபு அமீரகத்திற்கு வந்தார். ஆனால், அது பனிப்போர் நடந்துகொண்டிருந்த சமயம். இந்தியா தன்னை எந்த அணியிலும் இணைத்துக் கொள்ளவில்லை. அதுபோன்ற சூழலில் இந்தியாவிற்கு வெளியுறவு கொள்கை சிக்கலானதாக இருந்தது. எனவே, அந்த நேரத்தில் இந்திரா காந்தியால் பெரியளவு வெற்றி பெற முடியவில்லை.”

“தற்போதோ மோடி பிரதமராகி 8வது முறையாக அங்கு செல்கிறார். உலகமும் பெரியளவு மாறிவிட்டது. இருநாடுகளுக்கும் இடையிலான உறவும் வரலாற்றுப் பூர்வமாக சிறப்பானதாக உள்ளது. இதற்கு நாம் கண்டிப்பாக மோதிக்கு பாராட்டு தெரிவிக்க வேண்டும்” என்கிறார்.

நரேந்திர மோடியோ இந்துத்துவ அரசியலை சேர்ந்தவர். அவரது இந்த சார்பு வளைகுடாவை சேர்ந்த இஸ்லாமிய நாடுகளுக்கு பிரச்னையாக தெரியவில்லையா?

இதற்கு பதிலளித்த தல்மீஸ் அகமது, “ஒட்டுமொத்த உலகமும் கொந்தளிப்பில் உள்ளது. மேற்குலகம் பேசி வரும் விழுமியங்கள் (values) குறித்து கடுமையான கேள்விகள் எழுப்பப்படுகின்றன. மனித உரிமைகள் மற்றும் மத சார்பற்ற விழுமியங்களை ஆதரிக்கும் இதே மேற்குலகம் தான் கப்பல்துறையிலும் உள்ளது. இந்நிலை



யில், வளைகுடா நாடுகள் இந்தியாவுடன் பொருளாதார ரீதியாக நலன்களை ஏற்படுத்தும் உறவுகளை உருவாக்குவதற்குப் பதிலாக, உள்நாட்டு அரசியலில் கவனம் செலுத்தும் என்று சொல்ல முடியாது.”

“இதே ஐக்கிய அரபு அமீரகம் இஸ்ரேலை அங்கீகரித்து இருநாட்டு ராஜதந்திர உறவுகளை ஏற்படுத்தியது. அங்கு இதற்கு எதிராக எந்த எதிர்வினையும் எழவில்லை. காரணம், ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள 10 சதவீத மக்கள் இதற்கு எதுவும் செய்ய முடியாது.”

கார்னகி எண்டோவ்மென்ட் என்ற சிந்தனைக் குழுவைச் சேர்ந்தவரும், அபுதாபியின் முன்னாள் மேற்கத்திய தூதராகவும் இருந்த ஒருவர், “மோடியின் நடைமுறை அரசியல் மனப்பான்மையும், வலிமையான தலைவராக இருக்கும் அவரது பாணியும் சவுதி மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்தின் இளவரசர்களுக்கு பிடித்துள்ளது” என்று கூறுகிறார்.

### இந்துத்துவா முகம்

ஆகஸ்ட் 2019இல் கார்னகி எண்டோவ்மென்ட் சிந்தனைக் குழு வெளியிட்ட அறிக்கையில், “முதலில் அரேபிய தீபகற்பத்தில் உள்ள நாடுகளுடனான உறவை முன்னெடுத்து செல்வதில் நரேந்திர மோடியின் அரசியல் பின்புலம் ஒரு தடையாக இருக்கும் என்றே பார்க்கப்பட்டது. காரணம் மோடி இந்து தேசியவாதத்தின் தீவிரமான ஆதரவாளர். 2002-ம் ஆண்டு குஜராத் கலவரத்திற்கு பின் மோடியின் சர்வதேச செல்வாக்கும் பாதிக்கப்பட்டது. அந்த கலவரத்தில் நூற்றுக்கணக்கான இஸ்லாமிய மக்கள் கொல்லப்பட்டனர்.”

(16ம் பக்கம் பார்க்க)

# இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி - ஆமை புகுந்த வீடா?

**ச. வி. கிருபாகரன்**
**பிரான்ஸ்**



"...ஆமை புகுந்த வீடும்..." என்ற முதுமொழியை நாம் எந்த கோணத்தில் ஆராய்ந்தாலும் ஓர் நல்ல விடயமாக புரியவில்லை. அப்படியாக அர்த்தமுள்ள முதுமொழியை எதற்காக இங்கு சரித்திரம், பழமை, தொன்மை, வாய்ந்து விளங்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியுடன் தொடர்பு படுத்த வேண்டும் என்ற வினா, சான்றோர் முன்னிலையில் நிட்சயம் எழுந்தே ஆக வேண்டும். காரணங்கள் பல!

ஒரு புத்தகமே எழுதுமளவிற்கு விடயங்கள் நிறைந்திருக்கிறது. இலங்கை தமிழரசு கட்சி 1949ம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ம் திகதி தந்தை எஸ். ஜே. வி. செல்வநாயகத்தினால், ஜி.ஜி.பொன்னம்பலத்தின் காங்கிரசிலிருந்து பிரிந்து சென்று ஆரம்பிக்கப்பட்டது என்பது சரித்திரம்.

இதனுடைய அருமை பெருமைகள் சாவல்கள் வெற்றிகளை இங்கு எழுதி தான் வாசகர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய நிலையில் இக்கட்சி இல்லை. மிக சுருக்கமாக, அன்று முஸ்லீம் மக்களுக்கென ஓர் அரசியல் கட்சி கிடையாத காரணத்தினால், இக் கட்சியின் மூலம் அன்றைய முஸ்லீம் தலைவர்கள், பாரளுமன்றம் சென்ற காலங்கள் உண்டு.

இக் கட்சியின் தேர்தல் பங்களிப்பை ஆராய்வோமானால் - இவர்களது முதலாவது தேர்தல் பிரவேசமானது 1952ம் ஆண்டு முதல் தனித்தன்மையுடன் 1970ம் ஆண்டுவரை பயணித்த காலங்களில் பின் வருமாறு வெற்றி பெற்றார்கள்.

| ஆண்டு | மொத்த ஆசனங்கள் | தமிழரசு வென்றவை |
|---|---|---|
| 1952 | 95 | 02 |
| 1956 | 95 | 10 |
| 1960 மார்ச் | 151 | 15 |
| 1960 யூலை | 151 | 16 |
| 1965 | 151 | 14 |
| 1970 | 151 | 13 |

இதனை தொடர்ந்து 1977ம் ஆண்டு முதல் 2001ம் ஆண்டுவரை உதய சூரியன் சின்னத்தில் மற்றைய அரசியல் கட்சிகளுடன் இணைந்து தமிழர் கூட்டணியாகவும், அதனை தொடர்ந்து வீட்டு சின்னத்தில் 2004ம் ஆண்டு முதல் 2020 வரை பல அரசியில் கட்சிகளுடன் தமிழர் தேசிய கூட்டமைப்பாகவும் வடக்கு கிழக்கில் தேர்தல்களில் பங்கு பற்றினார்கள்.

மனித வர்க்கத்திடையே சர்ச்சைகள் பிரிவுகள் போன்றவை இல்லாத இனமோ நாடோ இல்லையானாலும், விசேடமாக ஈழத் தமிழர்களிடையே சர்ச்சைகள் பிரிவுகள் இல்லையாகில், ஏதற்காக இல்லையென ஆராய வேண்டிய காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

### வி. நவரத்தினம், இராசதுரை

ஆகையால் 1952ம் ஆண்டு முதல் தமிழரசு கட்சியிடையே அறவே சர்ச்சைகள் இருக்கவில்லை என்று வாதிடவில்லை. அப்படியானால், முன்னாள் ஊர்கவற்றுறை பாரளுமன்ற உறுப்பினரும், காலம் சென்ற வி. நவரத்தினம் அவர்களினால் எழுதப்பட்ட "தமிழ் தேசத்தின் வீழ்ச்சியும் எழுச்சியும்" (The Fall and Rise of the Tamil Nation) பொய்யாகிவிடும். இதே போல் இன்றும் நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கும் முன்னாள் பாரளுமன்ற உறுப்பினரும், தமிழரசு கட்சியின் மட்டக்களப்பின் அன்றைய சிங்கமான திரு செ. இராசதுரை அவர்களுக்கு நடந்த சம்பவங்கள் யாவும் பொய்யாகிவிடும்.

இவர்கள் இருவரும், தமிழரசு கட்சியின் பெயரை பாவித்து மக்களிடையே குளிர் காய்ந்தவர்கள் அல்ல. மாறாக தமிழரசு கட்சியியை ஆரம்ப காலத்திலிருந்தே வளர்த்து எடுத்த பெருமை இவர்களிற்கும் சாரும் என்பதை யாரும் மறுக்க முடியாது.

தமிழரசு கட்சியின் இன்றைய நிலையை கண்டு உலக தமிழினம் கவலையும் வெட்கமும் அடைகிறது. தமிழரசு கட்சி மட்டுமல்லாது, ஈழத் தமிழர்களின் இன்றைய அரசியல் நிலைக்கு யார் யார் காரணம் என்பதை நாம் முதலில் ஆராய கடமைப்பட்டுள்ளோம்.

இதில் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் பாரிய பங்கை யாரும் அலட்சியம் பண்ண முடியாது. இவரின் தந்தையார் குமார் பொன்னம்பலத்துடன் நன்றாக நெருங்கி 90ன் காலப்பகுதியில் சர்வதேச ரீதியாக வேலை செய்தவன் என்ற அடிப்படையிலும், கஜேந்திரகுமாருடனும் நன்றாக பழகி, சில சர்வதேச சமாச்சரங்களில் இவருடனும் இணைத்து பயணித்தவன் என்ற அடிப்படையில், ஒளிப்பு மறைப்பின்றி கூறுகிறேன் - கஜேந்திரகுமாருக்கும் அரசியலுக்கும் எந்த சம்பந்தமுமில்லை.

### கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

2009ம் ஆண்டு மே மாதத்தின் பின்னர், மக்களின் துயரங்கள் கவலைகள் இரத்த கறைகள் காய்வதற்கு முன்னர், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பலம் பொருந்திய தமிழ் தேசிய கூட்டமைப்பை உடைத்து, ஈழத் தமிழர்களின் அரசியல் பயணத்தின் முடிவிற்கு, ஆரம்ப புள்ளி போட்டவர். இதனை தொடர்ந்து "ஆமை புகுந்த வீடுட்டின்" படலாம் ஆரம்பமாகியது என்பதே யாதார்த்தம்.



கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி, உண்மையில் வடக்கு கிழக்கு மக்களை மனமார நோக்குபவராக இருந்தால், கிழக்கு வாழ் மக்களும் இணைந்து, இலங்கை தமிழ் காங்கிரசிற்கு அளித்த வாக்கின் அடிப்படையில் அக் கட்சிக்கு கிடைத்த தேசிப் பட்டியல் பாரளுமன்ற உறுப்பினர் பதவியை, எப்படியாக இவர்கள் யாழ்பாணத்தில் வசிக்கும் தனது ஆருயிர் நண்பனுக்கு வழங்கியிருப்பார்? அப்படியானால் இவர்கள் கூறும் ஒற்றையாட்சிக்கு வெளியிலான சமஷ்டி, தமிழீழம் எல்லாமே யாழ்ப்பாணமா? அமெரிக்காவிற்கு சென்ற தனிப்பட்ட விஜயத்தை, ஏதோ தமிழ் மக்களிற்காக சென்றதாக காண்பிப்பது அரசியலா? ஆகையால் தான் மீண்டும் கூறுகிறேன் இவருக்கும் அரசியலுக்கும் எந்த சம்பந்தமுமில்லை.

இவர்கள் யாவரும் தாம் வழங்கறிஞர்கள் என்று பெருமை பேசிய பொழுதும், 2006ம் ஆண்டு வடக்கு கிழக்கு மாகணங்கள் பிரிக்கப்பட்ட பொழுது, இவர்கள் என்ன செய்தார்கள் என்ற கேள்விக்கு இன்று வரை விடை காண முடியவில்லை. ஆனால் சிரிப்பான விடயம் என்வெனில், தமது கட்சி அங்கத்தவர்களுக்கு எதிராக வழக்கு போடுவதற்கு தயாராகவுள்ளனர்.

சுமந்திரனின் அரசியல் பிரவேசத்தை தொடர்ந்து, தமிழரசு, தமிழ் கூட்டமைப்பின் கொழும்பு காரியலாயம் போல் இவர் காட்சியளித்தார். அவ்வேளையில், திரு மாவை சேனதிராஜவும் மற்றவர்களும் தமது பலவீனங்ளை சுமந்திரனிடம் அடைவு வைத்தனர் என்பது இன்னுமொரு யாதார்த்தம். இதனை தொடர்ந்து படிப்படியாக, "ஒட்டகம் கூடரத்துக்குள் புகுந்த" கதையாக மாறியது.

இவற்றை தொடர்ந்து தமிழரசு கட்சி - சுதந்திர தின விழாவில் கலந்து கொள்வது, அரசுடனான சிநேகபூர்வமான தொடசல்கள், கிழக்கு மாகாணசபையில் இவர்களிற்கு பெரும்பான்மை இருந்தும், பெரும்பான்மை அற்ற கட்சி ஆட்சி புரிய துணை போனார்கள்.

இது மட்டுமல்ல 2015ம் ஆண்டு முதல் 2019ம் ஆண்டு வரை சிறிசேனரணில் அரசில் கிடைத்த அரிய சந்தர்பத்தில், 13வது திருத்த சட்டத்தை, ஓர் தற்காலிக அரசியல் தீர்வாக கூட தேடவில்லை. மாறாக, தமிழர் விவகாரத்தில் இரண்டில் மூன்றில் சரித்திரத்தில் கிடைக்க முடியாத அரசியல் சீர்திருத்தம் என்ற கோமாளித்தனமான 'ஏக்கீய ராஜ்ஜிய' என்ற பதத்தை வைத்து, தமிழர்கள் மீது சவாரி செய்து காலத்தை கழித்தார்கள்.

### இமாலாய பிரகடனம்

அத்துடன் காலியில் சிங்களவரிடையே சென்று, தமிழ் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளரும், தமிழரசு கட்சியின் தூணுமான சுமந்திரனினால் ஆகஸ்ட் 2018 ஆற்றிய உரை என்பது, எழுபது ஆண்டுகளாக அரசியல் உரிமை அற்று வாழும் வடக்கு கிழக்கு மக்களின் மானம் மாரியதை யாவும் உலகில் காற்றில் பறக்கவிடப்பட்டது.

இது மட்டுமல்லாது, கடந்த பாரளுமன்ற தேர்தலுக்கு தன்னிச்சையாக தயாரிக்கப்பட்ட வேட்பாளர் பட்டியல் போன்றவை இலங்கை தமிழரசு கட்சியின் 2010ற்கு பின்னரான செயற்பாடுகளில் ஒன்றாகும். இக் கட்சி, தந்தை செல்வாவும் அவரது சகாக்களினால் ஆரம்பிக்கப்பட்டதா? அல்லது கதிர்காமர், குமாரசூரியர் போன்றவர்களினால் ஆரம்பிக்கப்பட்டதா என்ற சந்தேகங்கம் தற்பொழுது மக்களிடையே எழுந்துள்ளன.

கொழும்பில் தயாரிக்கப்பட்டு, வெளிநாட்டு செயற்பாட்டாளர் என்ற போர்வையில், ஒரு சில சுயநலவாதிகளினால், சமர்பிக்கப்பட்ட கோமாளி பிரகடனமான "இமாலாய பிரகடணத்திற்கும்", அன்று சுமந்திரனினால் காலியில் ஆற்றிய உரைக்கும் இடையில், என்ன வித்தியசம் காணப்படுகிறது? இவற்றை, தமிழரசு கட்சியோ அல்லது இன்று அங்கு துள்ளிகுதித்து முறைதலை "கோரம்" அற்ற, தேர்தலை நடத்தி, முதுகெலும்பு அற்ற தலைவர்களிடம் பேரம் பேசுபவர்கள் சிந்திக்க வேண்டும்.

இறுதியாக, அடுத்த பாரளுமன்ற தேர்தலுக்கான தமிழரசு கட்சியின் வேட்பாளர் தெரிவு பட்டியலுடன், இலங்கை தமிழரசு கட்சியின் "ஆமை புகுந்த வீடு" நிரூபணமாகி விடும். எனது முன்னைய கட்டுரைகள் படித்தவர்களும், செவ்விகளை கேட்டவர்களும், எனது ஆரூடம் ஏதும் பிழைத்ததில்லை என்பதை புரிந்து கொள்வார்கள்.

(முற்றும்)

# மோடிக்கு முக்கியத்துவம் தரும் ஐக்கிய...

(14ம் பக்கத் தொடர்ச்சி)

“ஆனால் வளைகுடா நாடுகள், குறிப்பாக சவுதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் மோடியை இந்த கோணத்தில் பார்க்கவில்லை. மோடியின் பாதுகாப்பு தொடர்பான அணுகுமுறை, இஸ்லாமிய அரசியல் குறித்த இருநாட்டு தலைவர்களின் கருத்துகளோடும் பொருந்தி போகிறது. 2019 பிப்ரவரி, புதுடெல்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கலந்துகொண்ட சவுதி பட்டத்து இளவரசர் நரேந்திர மோடியை தனது மூத்த சகோதரர் என்று அழைத்தார்.”

கடந்த ஆண்டு செப்டம்பரில், இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கரிடம், ‘மோதி அரசு தனது இந்துத்துவா அடையாளத்தை முன்னிறுத்தினாலும், எப்படி பாகிஸ்தானுக்கு நெருக்கமாகக் கருதப்பட்ட நாடுகளான சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் எகிப்து ஆகிய நாடுகளுடன் நெருக்கமாக முடிந்தது? என்ற கேள்வி கேட்கப்பட்டது.

அதற்கு பதிலளித்த ஜெய்ஷங்கர், “ இந்த இஸ்லாமிய நாடுகள் மோடி அரசை உண்மையான இந்தியருடையதாக பார்க்கின்றன. நாம் நமது கலாசாரம் மற்றும் நம்பிக்கைகளோடு இணைந்திருப்பதையும், அது குறித்து பெருமைப்படுவதையும் அவர்கள் பார்க்கிறார்கள்.

அவர்களை பொருத்தவரை நாம் நம்மை என்னவாக காட்டிக்கொள்கிறோமோ அதுவாகவே இருக்கிறோம். இதுவே நம் மீது வளைகுடா நாடுகளுக்கு மரியாதையை ஏற்படுத்துகிறது. அவர்களும் தாங்கள் யார் என்பதில் பெருமையாக உணர்கிறார்கள். எனவே, தான் இந்தியன் என்பதற்காகவே பெருமைப் பட்டுக்கொள்ளும் மோடியின் தலைமையில் இந்தியாவை பார்க்கும் போது, அவர்கள் நம்மோடு மிக நெருக்கமாக உணர்கின்றனர்” என்று கூறினார்.

### ஐக்கிய அரபு அமீரகத்தில் ஏற்கனவே கோவில்கள் உள்ளன

பீகாரின் அவுரங்காபாத்தை சேர்ந்த ஷியாம்குமார் துபாயில் உள்ள இந்திய நிறுவனம் ஒன்றில் திட்ட மேலாளராக பணியாற்றி வருகிறார்.

அபுதாபியில் கோவில் திறந்து வைக்கவரும் பிரதமர் மோடி குறித்து பேசிய அவர், “ஐக்கிய அரபு அமீரகத்தின் அபுதாபியில் கட்டப்பட்டுள்ள இந்த கோவில் ஒன்றும் முதல் கோவில் அல்ல, ஏற்கனவே துபாயில் இரண்டு கோவில்கள் உள்ளன” என்று தெரிவிக்கிறார்.

இரண்டு கோவில்களும் துபாயில் உள்ளன. ஆனால் அவற்றின் கட்டிடம் கோவில் வடிவத்தில் கிடையாது. 2022 இல், கிருஷ்ணர் கோவில் துபாயில் உள்ள ஜெபல் அலிக்கு மாற்றப்பட்டது. ஜெபல் அலியில் ஒரு தேவாலயம் மற்றும் குருத்வாரா உள்ளது.

இதுகுறித்து ஷியாம் பேசுகையில், “இந்த கோவிலின் சிறப்பே அதன் பிரமாண்டம் தான். இந்த கோவில் நாராயணர் கடவுளுக்காக கட்டப்பட்டுள்ளது மற்றும் அங்கு நிறைய பணமும் உள்ளது. இதுபோன்ற சூழலில் அது திறக்கப்படுவதற்கு முன்பே அதன் மகத்துவம் பேசுபொருளானதில் ஒன்றும் ஆச்சரியமில்லை. ஓமன் மற்றும் பஹ்ரைனிலும் இந்து கோவில்கள் உள்ளன. துபாயில் அதிகளவிலான ஜெயின் மக்களும் உள்ளனர். அவர்கள் தங்களது வீட்டின் ஒரு தளத்தையே கோவிலாக மாற்றி வைத்துள்ளனர். நரேந்திர மோடி பிரதமரான பிறகு இந்தியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் இடையிலான உறவு வலுப்பெற்றுள்ளதாக நான் உணர்கிறேன்” என்று கூறியுள்ளார்.

இந்தியாவில் நிலவி வரும் மத அரசியல் சூழல் குறித்து ஐக்கிய அரபு அமீரகத்தில் ஏதேனும் எதிர்வினைகள் உள்ளதா என்ற கேள்விக்கு, “ஐக்கிய அரபு அமீரகத்தில் முடியாட்சி நடைபெற்று வருகிறது. ஊடங்கங்களுக்கும் கட்டுப்பாடு உள்ளது. 1 கோடி மக்கள் தொகையில், வெறும் 10 லட்சம் பேர் மட்டுமே இந்நாட்டு குடிமக்கள்”

“90 வீதம் மக்கள் புலம்பெயர்ந்தவர்கள். இங்கு அனைவரும் வணிகத்தில் ஈடுபட்டுள்ளனர். அதேபோல் இங்கு அரசியல் மட்டும் வெளியுறவு கொள்கை என இரண்டுமே வணிகத்தை சார்ந்துள்ளதே தவிர, இந்தியாவின் இந்து-முஸ்லீம் பிரச்னை சார்ந்து அல்ல. இந்தியாவுடனான உறவு என்பது வணிகம் மற்றும் பொருளாதாரம் மட்டுமே” என்று கூறுகிறார் ஷியாம்.

### இந்தியா - ஐக்கிய அரபு அமீரக வணிக உறவுகள்

இந்தியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்திற்கு இடையிலான இருதரப்பு வணிகம் தொடர்ந்து அதிகரித்து கொண்டே வருகிறது.

1970களில் இரு நாடுகளுக்கும் இடையேயான வருடாந்திர வணிகமே 180 மில்லியன் டாலர்கள் என்ற நிலையில் தான் இருந்தது. ஆனால், தற்போது அது 85 பில்லியன் டாலர்களை எட்டியுள்ளது.

2021 - 2022 காலகட்டத்தில் சீனா மற்றும் அமெரிக்காவிற்கு அடுத்து ஐக்கிய அரபு அமீரகமே இந்தியாவின் மூன்றாவது வணிக கூட்டாளியாக இருந்தது.

2022 - 2023இல் அமெரிக்காவிற்கு அடுத்து ஐக்கிய அரபு அமீரகத்திற்கே இந்தியா அதிக ஏற்றுமதிகளை செய்துள்ளது. அதன்படி இந்தியா ஐக்கிய அரபு அமீரகத்திற்கு 31.61 பில்லியன் டாலர் மதிப்புள்ள ஏற்றுமதியை செய்துள்ளது.

வெளியுறவு அமைச்சகத்தின் கூற்றுப்படி, FDI அடிப்படையில் ஐக்கிய அரபு அமீரகமே இந்தியாவின் ஏழாவது பெரிய முதலீட்டாளராக உள்ளது.

முக்கியமாக பெட்ரோலியப் பொருட்கள், விலை மதிப்பு மிக்க உலோகங்கள், கற்கள், நகைகள், கனிமங்கள், உணவுப் பொருட்கள், ஆடைகள், பொறியியல் மற்றும் இயந்திர தயாரிப்புகளை இந்தியா ஐக்கிய அரபு அமீரகத்திற்கு ஏற்றுமதி செய்கிறது.

இந்தியாவிற்கு பெரியளவில் எண்ணெய் வழங்குபவர்களில் ஐக்கிய அரபு அமீரகம் நான்காவது இடத்தில் உள்ளது. அதே ஐக்கிய அரபு அமீரகத்திற்கு அதிகம் எல்பிஜி மற்றும் எல்என்ஜி வழங்குவதில் இந்தியா இரண்டாமிடம்.

ஐக்கிய அரபு அமீரகத்தில் 35 லட்சம் இந்தியர்கள் வாழ்ந்து வருகின்றனர். 2022இல் மட்டும் இவர்கள் 20 பில்லியன் டாலர்கள் வருவாயை இந்தியாவிற்கு அனுப்பியுள்ளனர்.

ஒவ்வொரு ஆண்டும் அங்கிருந்து பணம் அனுப்புவது அதிகரித்து கொண்டே இருக்கிறது. 1970, 80 கள் காலகட்டத்தில் ஐக்கிய அரபு அமீரகத்தில் பணியாற்றிய 80 முதல் 90 வீதம் இந்தியர்கள் கடைநிலை ஊழியர்களாக மட்டுமே இருந்தனர். ஆனால், தற்போதோ நிலைமை மாறிவிட்டது. இப்போது அங்கு பணிபுரியும் 35 வீத இந்தியர்கள் அலுவலக பணிகளில், உயர் பொறுப்புகளில் இருக்கின்றனர்.

